
www.tamilarangam.net

# தூண்டில்



ilisch... ...sienb 44

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலகுமாரின் மாமியை இயக்கம் பிடித்து வைத்திருப்பதாகவும், ஐந்து பவுண் கொடுத்தால்தான் விடுவிப்போம் என அவர்கள் கூறியதாகவும் பாலகுமாரின் தாயார் கடிதத்தில் எழுதியிருந்தாள். இது வரை ஜேர்மெனியிலிருக்கும் மாமியின் மகன் எதுவும் அனுப்பவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தாள்.

"மாமி குடும்பம் வசதியே?" என்று கேட்டான் ஞானம்.

"என்ரை குடும்பம் வசதியாயிருக்க வேணுமெண்டால் அதுகள் எப்பிடி வசதியாயிருக்கிறது! தட்டிச் சுத்தினாத்தானே வசதியளை அனுபவிக்கலாம். மாமி குடும்பத்தைப் பேய்க்காட்டி உள்ளதைப் பிடுங்கித்தான் எங்கடை வீட்டுக்காறர் கல் வீடும், ஷோகேசும், எவர்சில்வர் ரம்ளரும், பிறிஜ் ஐசுமாய் வாழுயினம். மாமியின்ரை குடும்பம் இருந்ததைப் பறிகுடுத்திட்டு சின்னப்பெட்டிக்கடை வைச்சுச் சீவிச்சினம். அதையும் அவவின்ரை புருசன் குடிச்சு அழிச்சு தானும் அழிஞ்சு போச்சு. பிறகு மாமி ஊர் வீடுகளுக்கு அரிசி இடிச்சு குடுத்து, தொட்டாட்டு வேலையள் செய்துதான் பிள்ளையளை வளத்தவா" என்று பழைய நாட்களை நினைவு கூர்ந்தான் பாலகுமார்.

"மச்சானுக்கு ரெலிபோன் அடிச்சு கதைச்சனியெல்லே. என்ன சொல்லுறான்?"

"தன்னட்டை காசில்லையாம்"

"இதுதான் சொல்லுறது பிள்ளை பெத்த கல்லெண்டு"

"நாசமாய் போனனி. பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு"

"எதாயும் இருந்திட்டுப் போகட்டும். அவன்தான் காசில்லையெண்ணிறான். பிறகேன் இப்ப அவனிட்டைப் போறம்?"

"உண்மையாத்தான் காசில்லையோவெண்டு பாக்க"

ஓட்டோபான் வெளியேறும் பாதையில் கார் சரிந்து இறங்கியது. எதிர்ப்பட்ட முதல் சிக்னலே சிவப்பு!

"முதல் இந்த ஸ்ரட்டுக்கு வந்திருக்கிறியோ?"

"இண்டைக்குத்தான் முதல்"

"அப்ப என்னண்டு இடம் பிடிக்கிறது?"

"வாயிருக்குத்தானே"

பச்சை விழ, கியர் மாற்றி எடுத்தான். சுமாரான கிராமப்புறம். பல இடங்களில் இன்னும் தாவரங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்ந்தன.கட்டிடங்களில் பழமை மிச்சமிருந்தது.தட்டி வேலிகளுக்குள் குதிரைகள் சுத்திச் சுத்திக் கொண்டிருந்தன.வைக்கல் ஏற்றிய இராட்சத ட்ராக்ரர் முன்னால் ஊர்ந்ததால் நீண்ட வாகன வரிசை ஏற்பட்டிருந்தது.

"ஜேமனியிலை இன்னும் பாக்க வேண்டின இடங்கள் இருக்குத் தான் போலை இருக்கு"என்றான் ஞானம்.

"இந்தா அனுப்பப்போறம் எண்டு நிக்கிறாங்கள். பதினாறாவது சட்டத்தையும் ஒவ்வொரு நாளும் ரி.வி,.யிலை போட்டு வெட்டிக் காட்டுறாங்கள்.இத்தாலியிலை அல்பானியாச் சனங்களை ஆமியை விட்டு அடிச்சு முட்டையாத் திருப்பியனுப்பின மாதிரித்தான் இங்கையும் நடக்கப்போகுதோ தெரியாது.


எதுக்கும் கெதியிலை பாக்கவேண்டினதுகளைப் பாத்துவை"பாலகுமார் சொன்னபடி செற்றை உயிர்ப்பித்தான்."வாங்கி வந்தேன் ஒரு வாழைமரம்,வந்த பின்னே அது தாழைமரம்.."ஜேசுதாஸின் அழுகை.

வைக்கோல் ட்ராக்ரர் ஒருமாதிரி வழிவிட்டு ஒழுங்கைக்குள் இறங்கியது.கார்கள் சூடு பிடித்து மறுபடி ஐம்பதுக்கு எழுபதில் பாய்ந்தன.

பாலகுமார் நகர மத்திக்கு வந்து காரை நிற்பாட்டி முகவரி விசாரிக்க ஞானத்தை இறக்கி விட்டான்.

பாதையால் போனவர்களுக்கு குறுக்கே போய் ஞானம் "குற்றன்ராக்" சொல்லும்போதே பலர் அலட்சியப்படுத்தித் தாண்டிப்போனார்கள்.சிலர் துண்டைப் பார்த்து நீண்ட






பார்த்திபன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரம் ஆழமாகச் சிந்தித்தபின் தோளை உயர்த்திக்காட்டிவிட்டுப் போனார்கள்.ஒரு வயோதிப மாது மிக நிதானமாக இந்தப் பக்கம் போய்,அந்தப் பக்கம் திரும்பி..... என்று நீளமாய் விபரித்தாள்.

ஞானம் பொறுமையாய் கேட்டு, நன்றி சொல்லிவிட்டு வந்து ஏற, கார் மறுபடி இயங்கியது."எந்தப் பக்கம் இப்ப போக வேணும்?" பாலகுமார் கேட்டான்.

"ஆருக்குத் தெரியும்!"ஞானம் தோளை உயர்த்தினான்.

"விளையாடுறியே.கிழவி என்ன வடிவா விளங்கப்படுத்தினதெண்டு இஞ்சயிருந்தே பாக்கத் தெரிஞ்சுது"

"கிழவி நல்ல வடிவா விளங்க ப்படுத்தினபடியாத்தான் பிரச்சி னையே.எல்லாம் குழம்பி மறந்து போச்சு.கிழவியின்ரை முகத்தை ஏன் முறிப்பான் எண்டுதான் பொறு மையாய் நிண்டு கேட்டிட்டு ஓடியந் திட்டன்.முதல் சொன்னது மட்டுந் தான் ஞாபகத்திலை இருக்குது.நேர போய் வலப்பக்கம் திரும்பட்டாம். திரும்பினாப் பிறகு அதிலை நிப் பாட்டி பிறகு விசாரிப்போம்."

"நீயும் உன்ரை டொச்சும். உன்னையும் மினக்கெட்டு ஏத்தி யந்தன்"

"நீ டிப்புளோமாசெய்தனி தானே இனி நீயே இறங்கிக்கேள்."

அரை மணித்தியாலங்களுக்கும் கூடவாக அந்த நகரத்தைச் சுற்றி முடித்துவிட்டு,பலரை விசாரித்து ஒரு மாதிரி இடம் பிடித்தார்கள். காரை நிற்பாட்டி முன் வாசலுக்கு வந்ததுமே தமிழ் மணத்தது.வாசற் கதவு கை வைக்கத் திறந்தது.

"லாகர் மாதிரியும் இருக்கு. இல்லாமலும் இருக்கு"

பெல்லடித்து காத்திருக்க,திறந் தது."பாலா.. என்ன சொல்லாமற் கொள்ளாமல் வந்து நிக்கிறாய்..."

"இவன்தான் மச்சான்" கதவு திறந்தவனை அறிமுகப்படுத்திக் கொண்டு ஞானத்துடன் உள்ளே நுழைந்தான் பாலகுமார்.

அறைக்கு காப்பெற் போட்டிருந் தார்கள்.மூலையில் சில்வர் வி.டி., ரியூனர்,அம்ளிபயர், ஈக்குவலைலசர், றெக்கோட் பிளேயர்.... அடுக்கியி ருந்தன.நடுவில் பெரிய ஸ்ரீரியோ லொனி.கீழே வி.ஸி,ஆர்.,சுவரில் மடோனா,சமந்தா பொக்ஸின் ஒரு மாதிரியான போஸ்ரர்கள்.மத்தி யில் கண்ணாடி மேசையில் மூடி திறந்த அல்பாக்,கோலா,நிரம்பிய-நிரம்பாத கிளாஸ்கள்,சிகரெட்டுகள்.

"லீவுநான்தானே.அதுதான் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பம்பலுக்கு.கிழமையிலை ஆறு நாளும் மாடு மாதிரி முறியிறது தானே"பாலகுமாரின் கண் போன போக்குகளைப் பார்த்து மச்சான் எல்லா விளக்கமும் சொல்லிவிட் டான்.

அங்கு ஏற்கெனவே இரண்டு பேர் இருந்து கள் செருகிக் கொண்டிருந்தார்கள்.

"ஞானம் உப்பிடி இரு வாறன்" ஞானத்தை அவர்களுடன் இருத்தி விட்டு பாலகுமார் மச்சானைக் கூட் டிக்கொண்டு தனியே போனான்.

"காசென்ன மாதிரி?மாறியிட் டியே?"

"எங்கை மாறிறது.நீ போனி லை கதைக்கேக்கை விளக்கமாய் சொன்னனான்தானே.பேய்க் கட னிலை இருக்கிறன்.இப்ப கேட்டா ஒருதரும் தராங்கள்."மச்சான் தலையைச் சொறிந்து சொடுகு கிளப்பினான்.

"சம்பளம் எடுத்து என்ன செய்யிறனி?"

"மாலாவிலை கட்டுக்காசுக்கு எடுத்த சாமானுகளுக்கு சம்பளத் திலை கழிக்கிறாங்கள். கடன் காசு குடுக்கவேணும்.வீட்டு வாடகை,கற ன்ற்,காறுக்கு ரக்ஸ்,இன்சூரன்ஸ்...."

"பிடிச்சு வைச்சிருக்கிறது உன்ரை அம்மாவை"

"எனக்கு கவலை இல்லையெ ண்டு நினைக்கிறியே.என்ன செய்ய சொல்லு?இருக்கிற சாமானுகளை எடுத்துக்கொண்டு நீ காசு தாறியே?"சும்மா ஒரு பேச்சுக்குத் தான் அவன் அப்பிடிக் கேட்கிறான் என்று அப்பட்டமாகத் தெரிந்தது.

"அப்ப என்னதான் செய்யிற தெண்டு முடிவெடுத்திருக்கிறாய்?"

"எங்கையும் மாறப் பாக்கிறன். கிடைச்சா உடனை அனுப்பிப்போடு வன்.தற்சேலா கிடைக்காட்டித் தான்... அம்மாவுக்கும் வயசு போட்டுது.வயசு போன மனிசியை அவங்கள் என்ன செய்யப் போறா ங்கள்..."

செகிட்டைப் பொத்தி ஒன்று போட்டாலென்ன என்று தோன்றி யது பாலகுமாருக்கு. படத்தில் வரும் வில்லன் மாதிரி கெக்கட்டம் விட்டுச் சிரிக்காத குறை ஒன்று தான் மச்சானிலிருந்தது. இவனை யெல்லாம் ஊர்ச் சனத்துக்கு அரிசி குத்தி வளர்த்த நேரம் பேசாம....

"மாமியிட்டை இருந்து கடை சியா எப்ப கடிதம் வந்தது?"

மச்சான் படுக்கையறைக்குப் போய் கசங்கியிருந்த கடிதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒன்றை எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தான்.

.... அஞ்சு நானா சாப்பாடு தண்ணியில்லாம அடைச்சு வைச்சிருந்தாங்கள். அஞ்சு பவுண் தந்தால் தான் விடுறது எண்டு சொல்லிப் போட்டாங்கள். உன்னைப் பற்றித் தாங்கள் எழுதி வைச்சிருக்கிற குறிப்பையும் வாசிச்சு காட்டினாங்கள். நீ ஏழு வருசமாய் உங்கை இருக்கிறாயெண்டும், வேலை செய்யிறாயெண்டும், என்ன சம்பளமெண்டும் எல்லா விபரங்களும் வைச்சிருக்கிறாங்கள். தங்களிட்டை தப்பேலாதாம். என்னட்டை ஒருசதம் காசும் இல்லையெண்டும், நீ அனுப்பிறயில்லையெண்டும் உன்னைதைச் சொன்னன் .நம்புறாங்களில்லை. வெளிநாட்டிலை பிள்ளையெண்டு திருப்பித் திருப்பிச் சொல்லுறாங்கள். ஒரு மாதம் தவணை தந்து கடுதாசியிலை என்ரை கையெழுத்து வாங்கிக்கொண்டு விட்டிருக்கிறாங்கள். உன்னட்டைக் காசு கேக்கக் கவலையாய்த்தானிருக்கு. மாறி அனுப்ப உனக்கு ஏலுமே. இல்லாட்டி என்னை என்....

பாலகுமார் கடிதத்தை மடித்துத் திருப்பிக் கொடுத்தான். இவன் காசு எதுவும் அனுப்புவதில்லையென்றும், மாமி இன்னும் அரிசி இடிச்சுக் கொடுக்கிறா என்றும் அவனுடைய அம்மா எழுதியிருந்தான். எப்பிடி இவன் கல்லானான்? சூழ்நிலை மாத்தியிட்டுதோ?

"உன்ரை வீட்டாலை காசு குடுக்கச் சொல்லன். நான் பிறகு மாறித்தாறன்" என்றான் மச்சான்.

"எங்கடை வீட்டிலையோ? அதுகளுக்கு மனிதாபிமானம் இருந்தா

www.tamilarangam.net

இந்நேரம் பவுணைக் குடுத்திட்டு மாமியை மீட்டிருக்குங்கள்.என்ன பீப்பாக் குண்டுகள் போட்டாலும் அதுகள் மாறாதுகள்.தாங்களா யோசிச்சு தங்கடை சொந்தத்துக்கே உதவாததுகள் நான் கடிதம் போட்டே குடுக்கப் போகுதுகள். உதுகள் தரவளியிட்டை உவங்கள் உந்த மெதேட்டைப் பாவிக்காம அப்பாவியளை ஏன் பிடிக்கிறாங்களெண்டுதான் விளங்கேலை"

"டோய் வந்து கொஞ்சம் அடிச்சிட்டுப் போ.அங்கை போய் நிக்கிறாய்.எல்லாம் ஆறப் போகுது" அறைக்குள்ளிருந்து கூட்டாளிகள் மச்சானைக் கூப்பிட்டார்கள்.இருவரும் அங்கே போனார்கள்.

"அண்ணை நீங்கள் பாவிக்கிறனியளே...?"கூட்டாளி ஒருவன் கேட்க,ஞானம் சின்ன ஆசையுடன் பாலகுமாரைப் பார்த்தான்."நல்லா பாவிக்கிறனாங்கள்.இப்ப கார் ஓட வேணு ம்.பிறகு ஒருநாளைக்குப் பாப்போம்"என்றபடி ஞானத்தைக் கூட்டிக்கொண்டு வெளியேறினான் பாலகுமார்.

"வந்தனி நிண்டு சாப்பிட்டுப் போவன்" என்று மச்சான் சொன்னதை அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"மச்சான் என்னவாம்?காசு மாறியிட்டானாமோ?"

"தாய்க்கு வயசு போட்டுதாம். அதாலை அஞ்சு பவுண் கட்டுறது நட்டமாம்"

"என்ன மறுசனடாப்பா"

"நீ ஒழுங்கா வீட்டைக் கவனிக்கிறனிதானே"

ஞானம் பதில் சொல்லாமல் கசற் போட்டான்.ஜேசுதால் விட்ட இடத்திலிருந்து அழ, கார் எண்பதைத் தாண்டியது.

அடுத்தடுத்த நாட்கள் பாலகுமார் காசு கடன் கேட்டு வீடுகள் ஏறி,இறங்கினான்.முத்துவும்,ஞானமும் கூடத் திரிந்தார்கள்.இந்த நேரத்திலை வேலை இல்லாமப் போச்சே என்று பாலகுமார் அடிக்கடி கவலைப்பட்டுக்கொண்டான். வேலையில்லாதவர்களுக்குக் கிடைக்கும் காசில் மிச்சம் பிடிச்சாலும் அஞ்சு பவுணுக்குத் தேறாது.அதை விட உடனடியாகத் தேவை. ஒரு உயிரை மீட்க ஐந்து பவுண் கொடுப்பதற்கு இன்னும் பதினைந்து நாட்களே தவணை.

(இன்னும் வரும்)

>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு மனிதன் பற்றி....

விடுதலைப்புலிகளின் அரசியற் படுகொலைத் தொடருக்கு விமலே ஸ்வரன் பலியாகிப்போய் ஆண்டு கள் 3 ஓடிவிட்டன. விமலேஸ் என நண்பர்களால் அழைக்கப்பட்ட விமலேஸ்வரன் கொலை செய்யப் பட்ட 1988 ஆடி பதினெட்டாம் நாள் அன்று ஒரு நண்பகல்வேளை திருநெல்வேலி ரெஜிஸ்டார்லேனி லிருந்த அவனது தங்குமிடத்துக்கு அவன் பல்கலைக்கழகத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தான். தனது வணிகபீட இறுதியாண்டுப் பரீட்சையை எழுதிவிட்டு ஜீவனோ பாயத்திற்காக ரியூசன் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்த விமலே ஸ் அன்றைய தினம் தான் கொல் லப்படக்கூடும் என்று எதிர்பார்த் திருக்காவிட்டாலும், தனக்கு இத்த கையதொரு நிலை எற்படக்கூடும் என்ற ஒரு மெல்லியதான அச் சம் அவனிடம் இருக்கத்தான் செ ய்தது. ஆயினும் கண் முன்னால் கொல்லப்பட்ட பல'போராட்ட அக் கறையும், விடுதலை வேட்கையும் கொண்ட' நண்பர்களின் கொலைக் குப் பிறகு தான் மட்டும் விதிவில க்காகி ஒடி ஒளிந்துவிட அவன் விரும்பவில்லை. சாவு எந்த நிமிட மும் கொலையாளிகளின் துப்பா க்கி ரவை வடிவில் தன்னை அணு கக்கூடும் என்றபோதும், அத்தகைய தொரு சாவு வருகிற கடைசிக் கணம் வரையும் தன்னாலியன்றளவு 'தேசத்திற்கும், மக்களுக்கு'மாக தானறிந்தபடி செயற்படுவதற்காக ஆர்வமுடன் அவன் உழைத்துக் கொண்டிருந்தான்.

கொல்லப்படுவதற்குச் சரியாக 3 நாட்களுக்கு முன் அவனைச் சந் தித்தபோது அவன் சொன்னான்: "தட்டுவாங்களோ என்னவோ, உட னடியாக அதைச் செய்வாங்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. இந்திய அரசுக்கும், இலங்கையரசு க்கும் எதிரான என்ரை நிலைப்பா டும், தமிழ் மக்களின்ரை விடுதலை யிலை நான் கொண்டிருக்கிற ஆர் வமும் அவங்களுக்குத் தெரியும். இப்ப உள்ள நிலையில் என்னைப் பற்றி அவ்வளவு அக்கறை செலுத் தமாட்டாங்கள்"

"விடுதலையின் மீது அக்கறை யாக இருப்பதுதான் முக்கியம். மற்

www.tamilarangam.net

றதெல்லாம் முக்கியமில்லை.அந்த ஒன்றுக்காகவே அவங்கள் எதுவும் செய்யலாம்."என்று பதிலளித்தபோது அவன் மேலும் சொன்னான்:"என்னைப் பற்றிய பயமில்லை எண்டுதான் நினைக்கிறன்.ஆனால் மற்ற சின்ன இயக்கங்களை அழிக்கத் தொடங்கினால் அதோடை என்னையும் அழிப்பாங்கள்.அதுக்கு நானிருக்குது.."

இந்த உரையாடல் நடந்தது ஒரு மாலை நேரம் .தடித்த கண்ணாடியினூடாக ஒளிர்கிற கண்களைச் சிமிட்டியபடி ,ஒரு குழந்தை போல சிரித்துக்கொண்டே அவன் பேசினான்:"அது அவ்வளவு முக்கியமில்லை. மரணம் பற்றிய பயம் எனக்குப் பெரிசில்லை.வாழ்வதற்கு ஒரு அர்த்தம் வேணும் என்பது தான் முக்கியம்! எங்கடை போராட்டத்தை எப்பிடி இந்தத் தேக்கத்திலிருந்து நிமிர்த்தி ஒழுங்காக்கலாம் என்பதைத் தெரிந்துகொண்டு அதற்காகச் செயற்படும் ஒருவனாக நான் இருந்தால் எனது சாவு குறித்து நான் கொஞ்சம் விசேஷ அக்கறை செலுத்தவேணுமெண்டது சரிதான் .அது இல்லை என்றானபோது அது பற்றி அக்கறைப்பட்டு பெரிசா அலட்டிக்கொள்ள என்ன இருக்கிறது..."

அவனுக்கேயுரிய நிதானத்துடனும், அழுத்தத்துடனும் அவன் பேசியபோது, அதனுடன் உடன்பட முடியாமல் விடைபெறுகையில் அவன் சொன்ன கடைசிவார்த்தைகள்:"எதுக்கும் நீங்களும் கவனமா இருங்கோ!"

கொல்லப்பட்ட செய்தி கேட்டு ஸ்தலத்துக்கு ஓடிப்போய் பார்க்கக் கூட உடனடியாக யாரும் முன்வராத ஒரு பயங்கரமான நிலை. பல்கலைக்கழகத்தில் அராஜகத்துக்கு எதிரான போராட்டத்தில் முன்னின்று போராடிய முதன்மைப் போராளி நடுவீதியில் பட்டப் பகலில் 'இனம் தெரியாதோரால்'சுட்டுக்கொல்லப்பட்டுக் கிடக்கையில் யாழ் பல்கலைக்கழகத்தில் உயிரற்ற கட்டிடங்களும்,கன்ரீன் கதிரைகளும் கூட கண்ணீர் வடிக்க வேண்டிய நேரத்தில் உடனடியாகப் பகிரங்கமாகக் கொலையாளிகளைக் கண்டிக்கக்கூட முடியாத நிலையில் மௌனமாகவிருந்தது பல்கலைக்கழகம்.அந்த மௌனம் கலைய,அது முறுமுறுக்க 'கணிசமான நேரம்' எடுத்தது.

எமது போராட்டத்தின், எமது மக்களின் விடுதலைக்கான யுத்தத்தின் தோல்விக்கான அடிப்படைக்கு அந்தப் பயங்கரமான அமைதியை உருவாக்கிய கணங்களே நல்ல சாட்சியம்!

இந்த நிலை அன்றோடு முடியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விஜிதரனின் கொலைக்கு முடிவுகட்டப் போராடியவன் ஒரு அநாதை போல தெருவிலே சுட்டுத்தள்ளப்பட்ட பின்னும் பல்கலைக் கழகம் இயங்கியது;பாடங்கள் நடந்தன; பட்டமளிப்பு விழாக்கள் வழமையான படாடோபத்துடன் நடந்தன.

விமலேஸ் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டிருக்கிற இந்தக் கணத்திலும் பல்கலைக்கழகம் அதே நிலையில்தான் இருக்கிறது.ஒரு மாதத்திற்கு முன் தீப்பொறியைச் சார்ந்தவர்கள் என்ற பேரில் இரண்டு மாணவர்கள் கடத்தப்பட்டு விட்டார்கள்!

படுகொலையையும் செய்து, புதைகுழியையும் மூடிவிட்டு அதன் மேல் ஏறிநின்று கொஞ்சமும் கூச்சமின்றி, எந்தத் தயக்கமுமின்றி கொலையை மறுத்துப் பேசவும், ஏன் கொலையாளியைக் கண்டுபிடிக்கிறோம் என அறிக்கை விடவும் துணியுமளவுக்குப் பொய்மை மலிந்துவிட்டதொரு 'விடுதலைப்போராட்ட வரலாறு' உலகில் வேறெந்தத் தேசிய இனத்திற்கும் இருக்கிறதோ தெரியாது.அப்படி இல்லாவிட்டால் அவற்றுக்கெல்லாம் எமது யாழ்ப்பாணப் பாரம்பரியம் ஒரு மாபெரும் வழிகாட்டியாக இருக்கும்;இனிவரும் காலங்களில்!

கொல்லப்படுவதற்கு 22 நாட்களுக்கு முன்பாக இந்தியாவிலிருந்த தனது நண்பன் ஒருவனுக்கு எழுதிய கடிதத்தில் விமலேஸ் எழுதிய வாசகங்களை அந்த நண்பன் படித்துக்கொண்டிருக்கும் போது இங்கு விமலேஸ்வரனின் கதை முடிக்கப்பட்டுவிட்டது.அந்தக் கடிதத்தில் அவன் எழுதினான்:

"போராட்டத்தை நேசித்த எல்லா சக்திகளுக்கும் கிடைத்த பரிசு இதுதான்! இதற்கு நான் மட்டும் எவ்வாறு விதிவிலக்காக இருக்க முடியும்?எனவே இதுபற்றியெல்லாம் பெரிதும் மனவேதனை அடையாதே!இன்று போராட்டத்தில் ஈடுபட்ட எத்தனையோ இளைஞர்கள் தமது சொந்த மண்ணிலே காலடி வைக்க முடியாது தமது சொந்த, பந்தங்களை இழந்து தவிக்கிறார்கள்.அண்மையில் கூட சத்தியன் (முல்லைத்தீவு தொழிற்சங்கம்) வவுனிக்குளத்தில் L.T.T.E பிரச்சினை என கொழும்பு சென்று ஒரு வாரத்திற்குள் கொழும்பில் வைத்து P.L.O.T இனால் கொலை செய்யப்பட்டுள்ளான்..."

விமலேஸ் தான் தலைமையேற்று நடாத்திய போராட்டம் சம்பந்தமாக கிளப்பப்பட்ட சந்தேகம் குறித்து தனது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் இப்படி எழுதினான்:


".... நீ சொன்ன மாதிரி அரசியல்

www.tamilarangam.net

லாபம் தேட முற்பட்டவர்கள்,சுய விரும்பிகள்,புகழ் விரும்பிகள்,லும் பன்கள்,வேறு பல சமுக விரோத சக்திகளும் போராட்டத்தில் முன் னின்றது உண்மைதான்.நீ சொல் கிற மாதிரி எல்லோரும் புரட்சி கரமானவர்களைக் கொண்ட போராட்டம் எக்காலத்திலும் நடைபெறாது.அது ஒரு ஜனனாய கப் போராட்டம்.அதில் பங்குபற் றும் அனைவரையும் இணைத்துக் கொள்ளவேண்டியதுதான் யதார்த் தம்.பல்கலைக்கழகத்தை ஒரு புரட்சிகர ஸ்தாபனமாக கருதி நான் அப்போராட்டத்தில் நிற்க வில்லை.அதுவும் இப் பாழடைந்த சமுகத்தைப் பிரதிநிதித்துவப்படு த்தி நிற்கும் ஒரு ஸ்தாபனம் தான்!விஜிதரனைக் கூட உனக் குத் தெரியுந்தானே?எப்பிடியான ஆள் எண்டு.இந்த சனனாயக அத்துமீறல்களுக்கு எதிராக நாம் குரல் கொடுக்கவில்லையென்றால் தொடர்ந்தும் இதே நிலையைத் தான் கடைப்பிடிக்க வேண்டி வரும்.அதாவது ஒன்றிலும் ஈடு படாமல் இருக்கவேண்டிவரும்..."

எவ்வளவு யதார்த்தமான, தெளிவான சிந்தனை அவனுக்கி ருந்தது.தனது செயல் பற்றிய புரி தல் இருந்தது என்பதற்கு இந்த வரிகள் ஒரு நல்ல சான்று.சதா காலமும் தனது கருத்துகளை வளம்படுத்திக் கொள்ளவும்,மக் களைப் புரிந்துகொள்ளவும் அவன் முயன்றுகொண்டிருந்தான்."இராணு வத் தாக்குதல் நடந்துகொண்டி ருக்கும்போது கோயில் திருவிழா க்களும் நடந்துகொண்டுதானிருக் கும். இதை நாம் கண்டு ஜீரணி க்க முடியாமல் ஆயுதமுனையில் போய் வெருட்ட முடியாது.அது ஒரு கலாச்சார மாற்றத்தினூடா கத்தான் மாற்றலாம்..." என்று அவன் சொல்லும்போது கடந்த கால,சமகால போராட்டத்தில் மேலோங்கிய போக்கிலிருந்து அவன் எப்படி முரண்பட்டு நின் றான் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

விடுதலைப் போராட்டம் முட் டுக்குள்ளாகி நம்பிக்கை வரட்சி யும்,விரக்தியும் தொற்றிக்கொள் ளும் போக்கு தீவிரமடைந்திருந்த




அமெரிக்க - ரஷ்ய நட்புறவு !



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

87ஆம் ஆண்டுப் பகுதியில்தான் அவன் எழுதிய கடிதமொன்றில் ஒரு நிதானமான, அக்கறையுணர்வுள்ள போராளியாக நின்று எழுதுவதைக் காணலாம்.

"..... இயக்கங்கள் சம்பந்தமாக நீ எழுதியிருந்த கருத்தில் எனக்குப் பெரிய முரண்பாடில்லை. எங்களது போராட்டத்தைப்பொறுத்தவரை மிதவாத பிரபுத்துவ தலைமைகளின் பின்பு ஏற்பட்ட தலைமை குட்டி முதலாளித்துவ சிந்தனை படைத்த யாழ் மேலாதிக்கம் கொண்ட தலைமைகளே L.T.T.E. தொடக்கம் N.L.F.T, R.E.L.O.வரை இருந்தது.எனவே குட்டி முதலாளித்துவ தலைமைகள் உழைக்கும் மக்களின் பிரச்சினையை அறிந்துகொள்ள முற்படாத அல்லது அந்த உணர்வுக்குள் வராத எந்த நபர்களும் ஏகாதிபத்தியத்திற்குச் சேவகம் செய்யும் போக்காகவே இருக்கும்.நேரடியாக அவர்களுடன் தொடர்பில்லாவிட்டாலும் இவர்களின் அரசியல் நடவடிக்கைகள் அவர்களுக்குச் சார்பானதே. எனவே அங்கு பதவிப்போட்டி, கொலைகள் என்பன இருக்கத்தான் செய்யும்.அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு அவ்வவ்வியக்கங்களிலிருந்த முற்போக்குச் சக்திகளைப் பொறுத்தது.ஆனால் இங்கு ஏற்பட்ட திடீர் வீக்கத்தினால் எல்லாச் சக்திகளும் உள்வாங்கப்பட்டதால் இது முடியாமல் போய்விட்டது.வெகுஜன வேலையில் மக்களின் இன்னல்களுக்கு யதார்த்தமாக அவர்களுடன் இணைந்து உழைப்பதினூடாகத்தான் ஒரு சரியான,அந்த மக்களுக்காகப் பாடுபடக்கூடிய ஒரு தலைமையை உருவாக்கமுடியும். ஆனால் அதற்கான நடைமுறைச் சாத்தியம் இங்கு இல்லாமல் போயிருந்தது,முற்போக்குச் சக்திகளால் அது முடியவில்லை என்ற வாதத்தை வைத்துகொண்டு இதையெல்லாம் பிழை என்று விட்டு திரும்பவும் தனிய ஒரு ஆயுதக் கண்ணோட்டத்தை ஏற்படுத்தக்கூடாது.இங்கு தியாகம் செய்வதல்ல முக்கியம்.யாருக்கு அந்தத் தியாகம் என்பதுதான் முக்கியம்.அமெரிக்காவுக்கா? ரஷ்யாவுக்கா?நமது தேச மக்களுக்கா? என்பதைப் பொறுத்துத்தான் உண்மையான தியாகத்தை ஏற்றுக்கொள்ள வேணும்.இங்கு இளைஞர்களின் தியாகத்தை மதிக்க வேண்டும் என்பதில் எனக்கு முரண்பாடில்லை.அவர்கள் பாவிகள்.... எதுமறியாதவர்கள்... இன்று எத்தனையோ பெண் போராளிகள்.அந்தத் தலைமை இவர்களின் இழப்பை யாருக்காகப் பயன்படுத்துகிறது என்பதுதான் முக்கியம்.....

சித்தாந்தம் கதைத்தவர்களால் எதுவும் சாதிக்க முடியவில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதற்காக நாம் அதை நிராகரிக்க முடியாது. இந்தப் போராட்டத்தில் நின்ற போராட்டச் சக்திகளுடன் இணைந்து இப்போதே நிலைமைகளுக்கேற்ப படிப்படியான செயல்களில் நாம் இறங்கவேண்டும். இந்த இடைக்காலத்தில் அந்த வாழ்க்கைக்கு எம்மைத் தயார்படுத்திக்கொண்டு தீவிரமாக உழைக்கவேண்டும். இதற்கான அடிப்படை முயற்சிகளை இப்போது நான் செய்ய ஆரம்பித்துள்ளேன் நீயும் தமிழகத்தில் உள்ள சக்திகளுடன் தொடர்பை ஏற்படுத்து. இதுவரைகால இழப்பை, தியாகத்தை மதிக்கும் செயல் அதுவாகத்தான் இருக்க முடியும்..."

பல்கலைக்கழக மாணவர்களால் புலிகளின் கோரக்கொலையைக் கண்டித்து வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்றில் மாத்தயா 'தாம் எதுவும் செய்ய மாட்டோம்' என உறுதி யளித்திருந்ததாகவும், அதன் பின்னர் விமலேஸ் பகிரங்கமாகப் பல்கலைக்கழகம் வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பிரசுரத்தின்படி புலிகள் விமலேஸ்வரனைக் கொல்வதற்காகத் தீவிரமான தேடுதல்களை, உண்ணாவிரதப் போராட்டம் முடிவுற்ற சில நாட்களிலெல்லாம் தொடங்கியிருந்தார்கள். ஒடுக்கப்பட்ட கிராம மக்கள் மத்தியில் சென்று அவர்களது பாதுகாப்புடன் அவன் தலைமறைவாக இருந்த அந்தக் காலத்தில் புலிகளால் அவனைக் கண்டு பிடிக்கவோ, கொல்லவோ முடியவில்லை. தனது இந்த மக்களுடனான வாழ்க்கை பற்றி விமலேஸ்வரன் எழுதுகிறான்:

"....உண்மையில் அந்த வறிய கூலி மக்களோடு பழகினால்தான் தெரியும் உண்மையான அன்பு என்னவென்று. பாழைக் கத்திகள் சைக்கிள் செயின்கள், தூள்ப் பேணிகள் சகிதம் குமர்ப் பிள்ளைகள் தொடக்கம் முதியோர்வரை இரவு, பகல் காவல் காத்து 40க்கு மேற்பட்டவர்களை அவர்கள் பாதுகாத்தார்கள். Open Firing செய்துகூட 'இயக்கத்தால்' நுழையமுடியாது திருப்பியனுப்பிய பெருமை அக்கிராம மக்களுக்கு உண்டு. கல்வியறிவு அற்றவர்கள் தான். ஆனால் கள்ளம் கபடமற்ற குழந்தைத்தனமான அன்பை அளித்தார்கள். சரியான அரசியல் தலைமை ஏற்படவில்லையே தவிர மக்கள் என்றுமே தயாராக இருக்கிறார்கள்....."

விமலேஸ்வரனின் வாழ்க்கையில், சிந்தனையில் இந்த வறிய, கூலி, விவசாய மக்கள் நிறையத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்திய, இலங்கை அரசுகளின் பிடியிலிருந்தும், அராஜகத்தின் பிடியிலிருந்தும் மக்களை விடுவிக்க, உண்மையான விடுதலையை வென்றெடுக்க நாம் மக்

www.tamilarangam.net

களைச் சார்ந்து நின்று போராடி னால் வெற்றி நிச்சயம் என்ற உறு தியை அவன் அனுபவபூர்வமாக பெற்றுக்கொண்டது அப்போதுதான்!

எமது மண்ணின் விடுதலை வெற்றி பெறவில்லையென்றால் அதற்கு எமது மக்கள் மீது குறை சொல்ல முடியாது.எம்மைப் போன்றவர்களின் சுய அலுப்பும், அக்கறையின்மையும், சரியான அர சியல் வழியை முன்வைக்கும் திற மையற்ற,திராணியற்ற, கையாலா காத்தனமும்ததான் காரணமே ஒழிய மக்களல்ல.நாம் எமது 'மூளையைக் கசக்கி' சிந்திக்கவோ உழைக்கவோ தயாரற்று அதை வேறு யாராவது செய்வார்கள் என் பதுபோல் இருக்கிறோம் என்பதுதான் காரணம் என்று அவன் புரிந்துகொண்டான்.அதற் காக உழைக்க வேண்டும் என்ப தையே அவன் மேற்குறிப்பிட்ட மேற்கோள்களில் கூறியிருந்தான்.

விமலேஸ் எமது தேசத்தின் அநியாயமாகக் கொல்லப்பட்ட உண்மையான போராளிகளில் ஒருவன். அவ னது கொலைக்கு உரிமை கோரவும் திராணியற்ற அரசியல் நோஞ்சான்களான புலி களின் நடவடிக்கை மக்களையும் ,தேசத்தையும் முட்டுச் சந்தில் கொண்டுபோய் நிறுத்தும் ஒன்றே என்பதை காலம் அவர்களுக்கு உணர்த்தும்.வரலாற்றின் பாடங் களை முறையாகப் படிக்கப் புலிகள் மறுப்பார்களேயாயின், துப்பாக்கியால் தம்மை நியாய வாதிகளாக்கிவிடுவது என்றென் றைக்கும் சாத்தியம் என்று அவர் கள் நம்புவார்களேயானால் அவர் களையிட்டு பரிதாபமான வரிகளை வரலாறு எழுதும் என்பது சர்வ நிச்சயம்.

ஒவ்வொரு உண்மையான போராளியின் சுயமான சிந்தனை யின் மீதான தாக்குதலும் புலிகள் தமது சொந்த அரசியலுக்குத் தோண்டும் சவக்கிடங்கின் ஒவ் வொரு பொழி மண் என்பதைச் சுட்டிக்காட்டுவது விமலேஸ் கொல்லப்பட்ட இத்தினத்தை நினைவு கூருகையில் முக்கியமான தாகும்...

அவன் கொல்லப்படவில்லை; அவன் எரிக்கப்படவில்லை;அவன் இந்தத் தேசத்தின் விடுதலையை நேசிக்கும் அனைத்துமக்களினதும் மனதில் பதிக்கப்பட்டிருக்கிறான்.

-விமலேஸ்வரனின் நண்பன்
(ஈழம்)

www.tamilarangam.net

# சமாதானப் புறாவே!

சமாதானப் புறாவே...!
சந்துக்குள் புகுந்து சாந்தி பேசிடும் நீ...
ஏன் இன்னும் எம்முடன்
சங்கமிக்கவில்லை?

எட்ட எட்டப் பறக்குமுனைக்
கிட்ட நெருங்க விரும்பாதோர்
எட்டிப் பிடித்துவிடுவோமென்று
என்றோதொட்டுப் புலம்புகிறார்.

நாடிங்கே நாலா பக்கமும் நசுங்கி,
நாராக நலிவுற்றிருக்கும்போது,
நடப்பதென்னே இங்கு?
சமாதான நாடக ஒத்திகையோ?
அரங்கேறும் நாளிலையோ?

வடக்கேயும்,கிழக்கேயும்
காய்ந்துவிட்ட உதிரவடுக்களில்
மீண்டும் வடுப்பதிக்க,
பழிக்குப் பழியெனப்
படுகொலைகள் தொடர்கின்றன!

அகதி முகாம்களிலும்,பதுங்கு குழிகளிலும்
அரை வயிற்றுடனும்,அரை உயிருடனும்
போன உயிருக்காய் அழுவதற்கு
கண்ணில் நீரின்றி நெஞ்சில் நீர்வற்றி
மக்களிங்கே மாழுகையில்...
கொடியை நாட்டி,மீண்டும்
போர்க்கொடி உயர்த்துகிறார்!
ஜாடியெரியச் சுருட்டுக்குத் தீ தேடுகிறார்!!

தெற்கிலோ மேடு பள்ளமெங்கும்
மௌன ஜாலங்கள்!
இனப் பிரச்சினைக்கு இதோ... இதோ... என்று
எச்சில் எலும்பைக் காட்டி ஏய்க்கையிலே
நாயாய் வாலாட்டிக் கால் நக்கும் கீழோரின்
பாச நடிப்புகள்...
ஆடு நனைய ஓநாய் அழுவதுபோல்
இடையிடையே மக்களுக்காக
ஓலமிடுகின்றார்.
ஒற்றுமைக் கயிற்றை
ஒன்றாய்த் திரிக்கிறார்களாம்!

www.tamilarangam.net


புத்தம்.சரணம்.கச்சாமி... என்றே அதன்
பொருளறியாமல் புலம்பிடுவோர்
தெய்வ ஆசி வேண்டுகிறார்
போர் 'வீரருக்காக',
மாண்புமிகு தலைவருக்காக.
யாருக்காக இந்தப் போர்வீரர்?
யாருக்காக இந்தத் தலைவர்கள்?

சர்வமதப் பிரார்த்தனைகள்
சமாதானத்தைத் தேடுகின்றனவாம்!
சர்வ மனிதரும் சமமென்றிருந்தால்
சமாதானப் புறாவே.
நீ எமக்குக் கேடும் பொருளாய் இருப்பாயோ?

உனக்குப் பொருந்தும் கிளையொன்று
தேடுகிறோம்.
தேடிக்கொண்டிருக்கிறோம்.

**

கூனாக் கானா (ஈழம்)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(கலம் 43இன் தொடர்ச்சி)

பின்னிலவும் அற்ற இருளில் எதிர்க்காற்றுக்குப் பதில் சொல்லி பள்ளங்களில் விழுந்து பழுவுடன் விரைந்தனர் மக்கள் .துறையை அடைந்தபோது துறை வெறிச் சென்றிருந்தது. (நீண்ட நேரமாக வாம்!). அப்படியானால் படகுகள் வந்து வெறுமே திரும்பினவா....? அதுவும் 3 படகுகள்..? அப்படியானால் ஏன் மறித்தனர்...?

இரவில் மக்களை நீண்டநேரம் மறிப்பதன் மூலம் தூக்கத்தையும், அயர்வையும் விரட்ட சிற்றுண்டி அருந்தும் ஆட்தொகையினரைக் கூட்டித் தரும் ஒப்பந்தம் ஒன்று நிர்வாகிகளுக்கும்.வியாபாரிகளுக்கும் இடையில் உள்ளதாம் .நிர்வாகிகளுக்கு இதனால் தேநீர் விருந்துகள் நடத்தப்படும் சம்பவங்களும் உண்டாம்.

விமானத் தாக்குதல்களும்,இலங்கு வானூர்தியின் வேட்டுகளும் எந்நேரமும் உயிரைக் குடிக்கக் கூடியவொரு வெளியில் மக்களை இவ்வளவு நேரமும் நிறுத்திவைப்பது எவ்வகையிலான ஊழலற்ற நிர்வாகத்தை குறிக்கிறது?

துறையில் கடமையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் கஷ்டங்களைப் புரிந்துகொள்கிற அதே வேளை மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்படுவதன் காரணம் தனிப்பட்ட அவ் நிர்வாகிகளா? அல்ல. பதிலாக இன்னமும் மாற்றப்படாத கேள்விக்குட்படுத்தாத அதிகாரத்துவ அடுக்கே காரணம் .அதையேதான் தங்கள் ராணுவத்துள்ளும் மக்கள் அமைப்புக்குள்ளும், தாங்கள் நிறுவியுள்ள நிர்வாக அலகுகளினுள்ளும் பேணி வருகிற புலிகள் மேதின ஊர்வலத்தில் சமதர்ம சமூகம் பற்றிக் கோஷம் வைக்கிறார்கள். வியப்பாய் இல்லையா? நம்புகிறவர்களும் இருக்கிறார்கள்!

ஆனால் ஊர்வலத்தில் வெளிப்

## புலிகள் – மே தினம் ஊர்வலம் !



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்ட நியாயமான தன்மைகளை நாம் நிராகரிக்கவும் முடியாது. இன்றளவும் மாற்றமின்றி தொடர்கின்ற கொடூரமான இலங்கை அரசின் இராணுவ தாக்குதல்களை எதிர்கொண்டு வடக்கிலும்,கிழக்கிலும் நிதமும் உயிரழிந்த,உடைமைகள் அழிந்து போகிற மக்களுக்காகக் குரல் கொடுப்பது யார்? புலிகளை விமர்சிப்பதும் ,நிராகரிப்பதும் இலங்கை அரசை அங்கீகரிப்பதில் கொண்டு சென்றுவிடுவதை ஏற்கமுடியாது. புலிகள் விமர்சிக்கப்படுகிறார்கள் சரியான போராட்டத்திற்குத் தடையாக இருக்கிறார்கள் என்பதால்.இலங்கை அரசாங்கம் நிராகரிக்கப்படவேண்டியது அது இனவாதத்தைக் கொண்டுள்ளது என்பதால் மட்டுமல்ல, அது அரசு என்பதாலும் ஆகும்.

அதேவேளை இன்றைய சூழலில் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும்,புலிகளின் போராட்டத்திற்கும் தொடர்புகளும் உள்ளன. அதாவது புலிகளின் பாத்திரம் தெளிவாக அரசியல் அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். இலங்கை அரசின் ஒடுக்குமுறைகள் எவ்வளவுக்கு எவ்வளவு இருக்கவும் ,அதிகரிக்கவும் செய்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு புலிகளின் வளர்ச்சி அதிகப்படும்.அவர்களின் தேசியப் பரிமாணம் கூடும்.பிராந்திய வல்லரசுகள் ,வல்லரசுகளின் துணையோடு சிலவேளைகளில் புலிகளின் இராணுவ பலம் நசுக்கப்பட்டாலும்,அடிப்படையில் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு நியாயமான தீர்வுவைக்கப்படாதவரை மீண்டும் அவர்களது வளர்ச்சி தவிர்க்கவியலாதவாறு இருக்கும்.

இந்த ஊர்வலத்தைப் பார்க்கையில் சில விடயங்கள் ஞாபகத்திற்கு வந்தன. கடந்த காலங்களில் சனநாயகக் கோரிக்கைகளுடன் வைக்கப்பட்ட ஊர்வலங்களையும், கூட்டங்களையும் மக்கள் மறந்து போனது எவ்வாறு? அல்லது அது மக்களை அடையாமல் ஒரு மட்டத்துடனேயே நின்றுவிட்டது எவ்வாறு?எதனால்? சனநாயகத்தின் குரல்வளையை நசுக்கப் புலிகளால் முடிந்ததென்றால் எவ்வாறு? முற்போக்காளர்கள் பேசிய கொள்கைகளும்,கோட்பாடுகளும் மக்களை அடையாதது ஏன்?

புலிகள் பலமானவர்கள் என்பதால் சனநாயகத்தின் குரல்வளையை நெரித்தார்கள் என்பது ஒருபுறமிருக்க,சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்கும் திராணியும், மக்களிடம் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளும் வலுவும் அற்றுப்போய் முற்போக்குச்சக்திகள் இருந்தார்கள்

www.tamilarangam.net




மாமியார் உடைத்தால் மண் குடம்!
மருமகள் உடைத்தால் பொன் குடம்!!

என்பதும் ஒரு காரணம். இந்தப் பலவீனம் அவர்களது சித்தாந்தத் தெளிவின்மையிலிருந்தும் ,ஒற்றுமையின்மையிலிருந்தும் பிறந்தது எனலாம்.

புலிகளால் கொல்லப்பட்டவர்கள் எந்தவகையில் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்ட பொதுமக்களிலும் மேம்பட்டவர்கள் எனவும், இந்த மேம்பாடு சாதாரணமக்களிடமிருந்து முற்போக்காளர்களை அந்நியப்படுத்தும் ஒன்றா எனவும் கேள்விகள் வைக்கப்படுகின்றன.

எந்த இயக்கமானாலும் சரி அல்லது எந்தப் பொதுமகனானாலும் சரி நியாயம் கேட்டமைக்காக அல்லது நியாயத்தைப் பேசியமைக்காக எவரால் கொல்லப்பட்டிருப்பினும் அது பிழையானதே. இங்கே இலங்கை இராணுவத்தினதும் அரசினதும் ஒடுக்குமுறைகளும் சேர்த்தே பேசப்படவேண்டும். சனநாயகமும் ,சுதந்திரமும் உலகம் முழுவதும் உள்ள அனைத்து மக்களுக்கும் தேவையானதே.பாசிசமும் சர்வாதிகாரமும், அடக்குமுறையும் அனைத்து மக்களுக்கும் எதிரானதே.

மேலே வைக்கப்பட்ட கேள்விகளின் பின்னால்... பாசிசத்திற்குப் பலியான மனிதர்களின் மரணத்தை தனிமனிதர்களின் மரணமாகப் பார்க்கின்ற,மனித நேசம் பற்றிப் பேசுகின்ற பிராணிகளும் ஒளிந்திருக்கிறமை புலப்படும். இந்த மனிதநேசம் பேசுகின்ற பேர்வழிகளில் சில சுவாரஸ்யமான பேர்வழிகளும் உள்ளனர். முஸ்லீம் மக்களைத் துரத்தியதற்கு ஏதாவது அரசியல் ரீதியான தந்திரோபாயம்,தனிச் சிறப்புகள் பல வாய்ந்த பிரபாகரனின் மூளையில் எங்கோ ஒரு மூலையில் ஒளிந்திருக்கலாம் என்று பூதக் கண்ணாடியுடன் தேடிக்கொண்டிருக்கிற சில மனிதநேசர்களைக் கண்டேன் இங்கே..!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொத்தத்தில் சிவப்பு, மஞ்சள் நிறத்தில் அமைந்த தேசவிடுதலை சோசலிஸம்,தனியரசு, இனவாதம் எனப் பல காய்கறிகளைக்கொண்ட அழகான சாம்பாரான இந்த ஊர்வலத்தை பணக்கார இயக்கமான புலிகள் (மக்கள் அப்படித்தான் பேசிக்கொள்கிறார்கள்!) எவ்வாறு திரட்டினார்கள் என்பது வியப்புக்குரியதல்ல!தாம் எவ்வாறு தனியொரு நிறுவனமாக வளர்ந்தார்களோ அதே முறையில் அணி திரட்டினார்கள். இதனர்த்தம் அனைத்து மக்களுமே விருப்பார்வமற்ற முறையில்தான் கலந்து கொண்டார்கள் என்பதல்ல. அவர்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவர்களும் இருந்தனர். ஆயினும்.... ஊருக்குள்ளது ஒரு கோவிலென்றால் திருவிழாவுக்கு அங்குதானே செல்லவேண்டும்!அவ்வளவுதான்!!

ஒரு "நோட்டீசு" கூட அடிக்க முடியாத முற்போக்குச் சக்திகளுக்கும்,புலிகளுக்கும் உள்ள வித்தியாசம் புலிகள் ஒரு நிறுவனம். முற்போக்குச் சக்திகளோ உதிரிகள் அல்லது உதிரிகளாக உள்ள ஆயிரம் குழுக்கள்.. உலகம் முழுவதும்.

நான் முன்பு கூறியபடி சிலரின் முணுமுணுப்புகளைத் தருகிறேன்.

"மே தினத்தைத் தொழிலாளர் நடத்தின காலம் போய் முதலாளிகள் எல்லே நடத்தின.." (1)

"நலிவடைஞ்சுபோற பாட்டாளி வர்க்கத்தை கொழுக்கச் செய்யப் போறாங்களாம்.திரும்பவும் நல்லா உழைச்சு குடுக்கவெல்லே வேணும் அவங்களுக்கு.." (2)

"உழைச்சுக் குடுத்தாலும் பரவாயில்லை. உசிரை எல்லே கேக்கிறாங்கள்.." (3)

மனிதர்களின் வார்த்தைகளுக்குள் சிலவேளைகளில் சுயநலத்துடன் வெளிவருகிற வார்த்தைகளுக்குள்ளும் கூட சரியான படிப்பினைகளும் சமூக யதார்த்தங்களும் இருக்கும்.மக்களை அறியாமலே அது வெளிப்படும்.

(1) நடந்துகொண்டிருக்கும்போராட்டம் தொழிலாளர்களுக்கானதல்ல.
(2) நடத்தப்பட்ட ஊர்வலத்தின் பின்னணி முதலாளித்துவநலன் பேணல் மட்டுமே.
(3) மக்கள் உயிரிழப்பதை ,யுத்தத்தை,ஆயுதக் கலாச்சாரத்தை, மரணத்துள் வாழ்வதை வெறுக்கிறார்கள்.

ஆம்.அடிப்படையில் மனிதர்கள் வாழ விரும்புகிறார்கள்.இந்த அர்த்தத்தில் மனிதர்களுக்கிடையே தேச,இன,நிற,மத எல்லைகள் இல்லை.எல்லைகளை இடவிரும்புகிற எவருமே மானுட வாழ்வுக்கு எதிரானவர்கள்.

– அபராசிதன் (ஈழம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழிவு அரசியலா?
# தடுப்பு யுத்தமா?

'அழிவு அரசியலின் விபரீத வினைவா?தடுப்பு யுத்தமா?' என்ற உப தலைப்பில் இன்றைய யுத்தம் தொடர்பாக பு.கணபதிப்பிள்ளை என்பவர் கலம் 42இல் எழுதிய நூறு பூக்கள் பகுதியில் இடம்பெற்ற கட்டுரை தொடர்பானதே இக் கட்டுரையாகும். 'தேசத்தின் குறிப்புகளை' எழுதிவரும் பிரஜைகளது கருத்துகளுக்கு விமர்சனமாக இது முன்வைக்கப்பட்டிருப்பினும் அப்படி நேரடியாகச் சொல்லாமல் 'சில அரைகுறை மார்க்ஸிஸ்டுகள்' என்று மறைந்து நின்று தாக்கும் 'இன்றைய யுத்தமுறை' எனக்கு 'அலை' யேசுராசாவால் அடிக்கடி உதாரணமாகக் காட்டப்படும்,ஜே.ஜே.யில் வருகின்ற சுந்தரராமசாமியின் பாத்திரங்களில் ஒன்றான பாச்சுப்பிள்ளையை ஞாபகத்திற்குக் கொண்டுவருகிறது.

'நீ' என்று சொல்லாமல்'சிலர்' என்று சொல்வது ஒரு வசதியான நிலமை. இறுகினால் நழுவிக்கொள்ள வசதியான தாக்குதல் முறையாகும். எமது தேசத்தின் கடந்த கால யுத்தமும் இத்தகைய'நழுவல்' வாய்ப்புகளை வைத்துக்கொண்டே நடந்து வந்திருப்பதைப்போல விவாதத்துறைக்கும் இந்தச் சிந்தனைமுறை தொழிற்படுகிறதுபோலும்!

"தடுப்பு யுத்தத்தில் எவ்வித பங்கும் ஆற்றாது அதேவேளை மேதாவித்தனத்துடன் தடுப்பு யுத்தம்தான் ;ஆனால் விடுதலையைத் தரப்போவதில்லை என்ற கெட்டிக்காரக் கணிப்பினால் இந்த அரை வேக்காட்டு மார்க்ஸிஸ்டுகள் தமதுயிரைப் பாதுகாத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான உயிர்கள் அழிவதை உதாசீனப்படுத்துவது மிகவும் கீழ்த்தரமான செயலாகும்."





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று விமர்சனத்தை "ஒரு அயோக்கியத்தனமான, வெறும் மனப்பிரமைகளின் அடிப்படையில் முன்வைக்கப்படுகின்ற ,பிரஜைகளது குறிப்புகளையே ஒழுங்காகப்படிக்காமல் சொல்கிற அபாண்டமான குற்றச்சாட்டு" என்று சொன்னால்,"உங்களையல்ல,இது வேறு சிலரை" என நழுவிக்கொள்ள வாய்ப்பாகவே இந்தச் 'சிலர்' என்ற பதம் பாவிக்கப்பட்டுள்ளது.

பு.கணபதிப்பிள்ளையின் தனிப்பட்ட மொட்டைத்தனமான மோதலின் 'சாராம்சம்' என்ன என்பதை ஆராய்வதை விட்டுவிட்டு அவர் குறிப்பிடுகிற அழிவு யுத்தம் பற்றியாவது அவர் ஏதாவது கருத்துகள் சொல்கிறாரா என்று கவனிப்போம்.

அதற்கு முன் ஒன்றைத் தெளிவாக்கிவிட வேண்டும். நடைபெறுகிற யுத்தம் தேசிய விடுதலைக்கான யுத்தம் அல்ல .இது வெறும் தடுப்பு யுத்தம்தான் .இது தடுப்பு யுத்தம் என்ற மட்டத்திற்கு அப்பாலே வளர முடியாது .அப்படி வளர்த்தெடுக்கும் அரசியலைப் புலிகள் கொண்டிருக்கவில்லை என்பது தான் பிரஜைகளின் வாதமாகவிருந்தது என்பதை சென்ற கலம் வரையிலான 'தேசத்தின் குறிப்புகளைப்' படித்ததிலிருந்து அறிந்து கொண்டுள்ளேன்.

பு.க.விற்குப் புரியவில்லையோ என்னவோ இதைக் கவனிக்காமலேயே விவாதத்தை நகர்த்துகிறார். புலிகளுக்குப் பிரஜைகள் முண்டு கொடுக்கிறார்கள் என்று கோபிக்கிற வேகத்தில்,பிரஜைகள் சொல்வதைக் கூட எது என்றுகவனிக்க பொறுமையில்லாமல் போய் விடுகிறது .பிரஜைகளுடன் தான் முரண்படும் இடம் என்ன என்பதை அவரால் புரிந்துகொள்ளமுடியவில்லை.புலிகளை அழிவு யுத்தக்காரர்கள் என்று பிரஜைகளும் நிராகரிக்க வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பு! அதனால் தான் பிரஜைகள் 'தடுப்பு யுத்தம்' என்று சொன்னதை ஒரு நற்சான்றிதழ் வழங்கலாக எடுத்துக்கொண்டு சீறியிருக்கிறார்.

இது அவரது சிந்தனையிலுள்ள தடுப்பு யுத்தம் உயர்வானது,புரட்சிகரமானது,விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது போன்ற பிரமைகளை பிரஜைகள் மீது ஏற்றிவைத்துக் கொண்டு பேசுவதேயன்றி வேறல்ல.

நடந்தகொண்டிருப்பது தடுப்பு யுத்தம் என்ற மதிப்பீடு அது சரியானதே என்ற அர்த்தத்தைத் தந்துவிடுமா? ஒரு யுத்தத்தில் வெற்றி,தோல்வி வெறும் ஆயுத பலம்,ஆட்பலம்,ஏன் மக்கள் பங்களிப்பு என்பவற்றால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. அந்த யுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தத்தினை நடாத்துவதில் தொழிற் படுகின்ற சிந்தனைமுறை,அரசியல் என்பனவே தீர்க்கமான பங்கை வகிக்கின்றன. புலிகள் அவலை நினைத்து இடிப்பது உரலைத்தான் என்பதையே 'தடுப்பு யுத்தம்'என்ற மதிப்பீடு காட்டுகிறது. அவர்கள் உரலைக்கூடச் சரியாக இடிக்கவி ல்லை என்பதால் அவர்கள் வேறெ தையோ இடிக்கிறார்கள் என்ற முடிவுக்கு பு.க. வந்துவிடுகிறார்.

உரலை இடிக்கிறது அவர்களி ன் சிந்தனையில்அரசியலில் தெளி வாக இல்லை.அதனால் தடுப்புயுத் தத்தைக்கூட அவர்களால் சரியாக நடாத்த முடியாது.அது பின்னேறு வதும்,தேங்குவதும் பின் முன்னே றுவதுமாக ஒரு குறிப்பிட்டகோட் டுக்குள்ளேயே இயங்க முடியாத இயக்கமாக உள்ளது.தடுப்புயுத்தம் என்ற அதன் உச்ச எல்லையைத் தாண்டி மேலே போய் விடவோ கீழே போய்விடவோ,சரணடைந்து விடவோ முடியாதபடிக்கு அதன் அரசியல் அமைந்துள்ளது. இதைப் புரிந்துகொண்டால் அவர்கள் தடுப் பினைச் செய்யவதும், எதிரியிடம் பறிகொடுத்து ஓடிப்போவதும்,மீண் டும் பழையபடி எதிர்த்துப் போரி டுவதும், சுற்றிச் சுற்றி எழுவதும் தாழ்வதுமாக ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே நிற்கிறார்கள் என்பதை விளங்கிக்கொள்ள முடி யும்.

இதைவிட்டுப் புலிகள் விடுபட முடியாததற்குக் காரணம் அவர்க ளது வர்க்க நலன்,சிந்தனைமுறை, அரசியல் என்பனவாகும்.தொடர்ச் சியான தேக்கமும் முன்னேற்றம ற்ற நெருக்கடியான இருப்பும்,அவ ர்களது சிந்தனைமுறை காரண மாக ஒரு இருப்பு பற்றிய பிரச்சி னையாக மாறி அனைவரையும் சந்தேகிக்க வைக்கிறது. கொலை யும், அழிவும் தங்களை விடுவிக் கும் எனப் புலிகள் நம்புகிறார்கள். ஆனால் அது ஒருபோதுமே சாத் தியமில்லை.


பு.க.வின் பாணியில் சொன்னா ல் ஒருவகையில் தமது இருப்பிற் காகப் புலிகள் நடத்தும் செய்கை கள் அவர்களது சொந்த அழிவுக் கானவையே என்ற அர்த்தத்தில் அது'அழிவு அரசியல்தான்','அழிவு யுத்தம்தான்'.ஆனால் அது உன்னா ர்ந்த பிரச்சினை.புறவயமான கணி ப்பீடு அது அல்ல. பு.க.வின் மயக் கம் இங்குதான் வருகிறது. அல் லது அவரது முற்றுமுழுதான 'மார்க்ஸிய அறிவுத் தெளிவு'இதை மொத்தமான அழிவு அரசியலாகக் கணிப்பிட்டு விடுகிறது.

"கொள்ளியைக் கொடுத்துவிட்டு கொள்ளிவைக்கிறான் வைக்கிறான்" என்று பேய்க்காட்ட கத்துவதாக வும், "அரசபடையின் சீற்றத்தைக் கூட்டும் நடவடிக்கைகளைப் புலி கள் செய்வதால் ராணுவம் தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




"அரசியல் தஞ்ச சட்டத்தை உடனே ரத்துச் செய்ய வேண்டும்"

– ஆளும் கட்சி

"அரசியல் தஞ்ச சட்டத்தை உடனே நீக்க வேண்டும்"

– எதிர்க்கட்சி

மக்கள் மீது திரும்புகிறது" என்றும் அரச ராணுவம் பற்றிய பு.க.வின் கணிப்பு இலங்கை ராணுவத்திற்கு வக்காலத்து வாங்குவது என்று நான் சொன்னால் அது தப்பா?

கொள்ளியைக் கொடுக்காவிட்டால் அவன் கொளுத்த மாட்டான்! என்று கருதுவது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தமிழரசுக் கட்சி பெயர்ப்பலகைகளில் தார் பூசினதுதான் காரணம் என்பது போன்ற முந்நாள் இடதுசாரிக்கட்சிகளின் கருத்துப் போன்றது.பேரினவாதத்திற்கு முண்டு கொடுக்க அவர்களால் பாவிக்கப்பட்ட கண்டுபிடிப்புகளில் இதுவுமொன்று.இந்த இடத்தில் பு.க.விடம் யாராவது இப்படிக் கேட்டால் - "புலியின்ரை குணம் தெரியும்தானே. பிறகென்ன. வாயை மூடிக்கொண்டு சும்மா இருங்கோவன்" என்று சொன்னால் சரியென அவர் நினைப்பாரா?அப்படிக் கேட்டால் புலி அடிக்கும்தானே என்று அவர் ஒப்புக்கொள்வாரா?

மக்கள் எதுவுமே செய்ய முடியாமல் இருப்பதற்கு புலிகள்தான் காரணம் என்றும் ,ராணுவத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தும் சுயாதீனக் குழுக்கள் முடமாக்கப்பட்டதால் ராணுவம் தன்னிஷ்டப்படி நடப்பதாகவும் எழுதும்போது இவர் எந்த நாட்டைப் பற்றி எழுதுகிறார் என்ற சந்தேகம் எழுவது இயல்பே.

சுயாதீனக் குழுக்கள் 'ராணுவத்துடன் பேசி' நிலைமையைச் சரிசெய்ய எந்தக் காலத்தில், எந்த ராணுவ வெறியாட்டத்தின்போது சாத்தியமாகவிருந்தது? இது எப்படித் தமிழ்மக்களின் உரிமைகளை வழங்குவதில் வாய்ப்பான அம்சமாக இருந்தது? தவிரவும் மக்களைப் பாதுகாப்பதற்கு புலிகள் இல்லாதபட்சத்தில் சுயாதீனக்குழுக்களால் முடிந்திருக்கும் என்று

www.tamilarangam.net

இவர் உண்மையில் நம்புகிறாரா?

சரி,அப்படியானால் மனித உரிமை மீறல்களுக்கும்,தாக்குதல்களுக்கும் எதிராக 'மக்கள்' செய்த 'ஏதாவது' ஒன்றை இவர் குறிப்பிடுவாரா? சிவில் யுத்தம் அதாவது மக்களுக்கெதிரான யுத்தம் ஒன்றைப் புலிகளுடனான யுத்தமென்ற பெயரில் அரசு கட்டவிழ்த்துவிட்டிருக்கும்போது,3 ராணுவம் கொல்லப்பட்டதற்காக கொக்கட்டிச்சோலையில் 150க்கு மேற்பட்ட பொது மக்களைக் கொல்லவும்,500 வீடுகளைத் தீக்கிரையாக்கவும், பாடசாலை மாணவிகளைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கவும் முடிந்த, அதற்கென அனுப்பப்பட்ட ராணுவத்தை தடுக்க 'சுயாதீனக் குழுக்களின் பேச்சுவார்த்தை' உதவி செய்யும் என்று பு.க. கருதுகிறார்தானா?!

சுயாதீனக் குழுக்கள் இயங்க மறுக்கப்பட்டதுபோன்ற சனனாயக மறுப்பு நடவடிக்கைகளை புலிகள் மேற்கொண்டது குற்றம்தான்.அது புலிகள் தாங்களது தலையில் தாங்களே மண் போடும் ஒரு நடவடிக்கைதான்.இது எதிர்க்க வேண்டிய ஒரு மோசமான நடவடிக்கை என்பதும் உண்மைதான்.ஆனால் இது எவ்விதத்திலும் இக் குழுக்கள் தமிழ் மக்களைப் பாதுகாத்திருக்கும் என நம்பப் போதுமானவையல்ல.

"புலிகளின் அரசியல் தோற்றுப் பாட்டினைப் புரிந்துகொள்ள அது சாராம்சத்தில் எதை மையப்படுத்தியிருக்கிறது எனப் புரிந்துகொள்வது அவசியம்" என்று குறிப்பிடும் பு.க.விடம் அதன் சாராம்சம் என்ன என்று விளக்குவார் என நாம் எதிர்பார்ப்பது நியாயமே. ஆனால் அவர் அப்படிச் செய்யமாட்டார். அது அவருக்கு முக்கியமில்லை.அவர் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொன்னவுடன் நமக்கெல்லாம் புரிந்துவிடுகிறதென்று அவர் நினைக்கிறார். அதனால் தான் தோற்றப்பாட்டைவிட்டுவிட்டு புலிகளின் 'சாராம்சம்' பற்றிச்சொல்லவேண்டுமென வந்தவர்"மக்கள் விடுதலை என்ற அடிப்படையில் போராட்டத்தை நடத்தும் அரசியல் புலிகளிடம் இல்லை.பலவீனங்களைவிட்டு பலங்களை ஒன்றிணைக்கும் தேசநிர்மாண நோக்கிலான அரசியல் புலிகளிடம் இல்லை.மக்களின் அழிவுகளினூடாகவரும் பிரச்சாரத்தையே பயன்படுத்துகின்றனர்."என்று திரும்பவும் தோற்றப்பாடுகளைப் பற்றியே எழுதுகிறார்.

பு.க. சொல்கிற பலம்,பலவீனங்கள், மக்கள் விடுதலை என்பன பற்றி அந்த சொற்றொடர்களுக்கு அப்பால் என்ன இருக்கிறதென்ற தெளிவாவது இந்த முற்றுமுழுதான முழுவேக்காட்டு மார்க்ஸிஸ்டுக்கு இருக்குமோ என்னவோ தெரியவில்லை!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் பற்றிய பார்வை குரூர மானது. குரூர அரசியலினூடாக அதிகாரத்திற்கு வந்தார்கள் என்று தனது ஆத்திரத்தைக் கொட்ட அடைமொழிகளைத் தேடிப்பிடித்த மாதிரி கொஞ்சம் நிதானமாக நிலைமையை மதிப்பிட்டிருந்தால் தனது பிரச்சினையை அவரே தீர்த்துவிட முடியும். தவிரவும் பிரஜைகள் என்ன எழுதினார்கள் என்பதும் புரிந்துவிடும்.

இலங்கை அரசு பற்றிய பு.க. வின் மதிப்பீட்டுடன் உடன்படமுடியாவிட்டாலும்,ஓரளவுக்காவது புறவயமாக விடயங்களை ஆய்வுசெய்யும் பண்புடன் ஆராய முயன்றுள்ளார். ஆனால் அதுகூட அதன் தன்மை என்ன,எமது போராட்டத்தில் எப்படி அணுகப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்பட வில்லை.மாறாகப் புலிகளைத் தாக்குவதற்காகவே செய்யப்பட்டதாகத் தெரிகிறது.இலங்கையரசை நியாயப்படுத்துகிற அளவுக்குப் போகா விட்டாலும் அது குறித்து பு.க.வுக்குள்ள சார்புநிலை அவர் அடுத்த கணமே புலிகள் மீது சீறிக்கொண்டு பாய்வதிலிருந்து புரிந்துவிடுகிறது.

இலங்கை அரசு இனப்படுகொலையைத் தொடர்ந்து செய்ய முடியாது;செய்யாது என்றும் ,பௌத்த பேரினவாதத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அற்புதமான கனவுகளை டயன் ஜயதிலக வழியாகக் கண்டுகொண்டிருக்கும் பு.க அவர்களின் முற்றுமுழுதான மார்க்ஸியம் நிலைமைகளை மதிப்பிடுவது ஏன் என்பதை எப்படிப் புரிந்து கொள்ளாமல் போனது என்பதுதான் பெரிய புதிர்!

இந்த இடத்தில் ஒரு சிறு குறிப்பு சொல்லலாம். இலங்கையின் பௌத்த பேரினவாதத்தில் வெடிப்பு ஏற்படுவதாக சொல்லப்படுவது இப்போது ஒரு புதியவகை 'மார்க்ஸியவாதமாக' கொழும்பில் சில புத்திஜீவிகளிடையே உலாவுகிறது.டயன் ஜயதிலகவினால் பிரச்சாரம் செய்யப்படும் இது உண்மை நிலைக்கு நேர் எதிரானது. கலாநிதி உயங்கொட, ஜயதேவ போன்றோர் இது பற்றிய தமது ஆய்வுக் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர் .பிரேமதாசவின் புதிய பம்மாத்து அரசியல் பௌத்தபேரினவாதத்தை மேலும் இறுகச்செய்கிறது.பண்டைய மன்னர் வழி சிந்தனைமுறையைப் புதிதாகத் திணிக்கிறது. இது தமிழ் மக்களின் விடுதலைக்கும், தேச சுயநிர்ணய உரிமைக்கும் நீண்ட நாளில் முழுநாட்டுக்கும் மாபெரும் ஆபத்தாக மாறப்போகின்றது என்பது வெளிப்படை.'சாராம்சத்தை' எல்லாவற்றிலும் பார்ப்பது போலவேதான் இதிலும் பு.க. பார்த்துள்ளார்.சிக்கல் என்னவென்றால் எல்லா நேரமும் அவர் 'சாராம்சம்' என மய

www.tamilarangam.net

ங்குவது வெறும் தோற்றப்பாட்டை யே என்பதுதான்!

இது தடுப்பு யுத்தம் அல்ல என்று நிறுவ, திடீரெனச் சண்டை தொடங்கப்பட்டது, கைதான முஸ் லிம் பொலிஸாரைக் கொன்றது போன்ற காரணங்களை முன்வைக் கும் பு.க அவ்வளவு கஷ்டப்படவே ண்டியதில்லை.யுத்தம் தடுப்புயுத்தம் அல்ல,அது மக்களைப் பாதுகாக்கி ன்றது எனச் சொல்ல முடியாது என்று சொன்னாலே போதுமா னது .எல்லோருக்கும் அது இலகு வாகப் புரிந்துவிடும்.

ஆனால் யுத்தம் தடுப்புயுத்தமா க இல்லையென்பதும்,நடைபெறும் யுத்தத்தின் சாராம்சம் தடுப்பு யுத் தம் என்பதும் ஒன்றல்ல.இரண்டை யும் பு.க. குழப்பியுள்ளார். அவர் சொல்ல வந்தது யுத்தம் சாராம்ச த்தில் தடுப்பு யுத்தமல்ல என்பதை. சொன்னதோ இது முழுமையாகத் தடுப்பு யுத்தமாக இல்லையென்ப தையே.(திரும்பவும் பழைய அவ லும்,உரலும் ஞாபகம் வருகிறது!)

சரி,சாரத்தில் அது தடுப்பு யுத் தமே அல்ல என்றால் அவர் குறி ப்பிடும் அழிவு யுத்தம்தான் அது என்று நிருபிக்க வேண்டாமா?

அவர் அழிவு அரசியல், அழிவு அரசியல் என்று சொன்னபோதும் அது எது என்பதை ஒரிடத்திலும் விளக்கவேயில்லை .இவர் குறிப்பி டும் அழிவு அரசியல் எது என்று திருப்பித் திருப்பிக் கட்டுரையைப் படித்தபோதும் எங்கும் அது புலப் படவில்லை.சிலவேளை பிரஜைகள் கண்டு பிடிப்பார்களோ தெரியவி ல்லை.

அழிவு அரசியல்தான் புலிகளின் அரசியல் என்றால் அது என்ன? அதன் வேர் என்ன? அதன் நோக் கமென்ன? அது பற்றி விளக்கவே

ஜேர்மனிக்கு அகதிகள் படையெடுப்பு!ஆபத்து!!
- வெளிநாட்டில் ஜேர்மனி உல்லாசப் பிரயாணி






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ண்டாமா?

புலிகள் நடத்துவது அழிவு அரசியலாக இருக்கிறது என்றுவைத்துக்கொள்வோம் - ஒரு விவாதத்திற்காக!ஆனால் அதுதான் இன்று யதார்த்தத்தில் இருக்கிறது என்பதால் இன்றைய யுத்தம் அழிவுயுத்தம்; இது அரசால் அல்ல ,புலிகளால் திணிக்கப்பட்ட யுத்தமென்று சொல்லும் பு.க இதற்கான முடிவு என்ன என்று ஆராயவேண்டாமா? மக்கள் மீது இவ்வளவு அக்கறையுடன் எழுதும் பு.க மக்களுக்குமுன் வைக்கும் வழிதான் என்ன? சரி, வழிதான் வைக்காவிட்டாலும் இது எங்கே போய் முடியப்போகிறது என்றாவது சொல்லவேண்டாமா?

தடுப்பு யுத்தத்தில் ஈடுபடாதது பிரஜைகளின் உயிரைப் பாதுகாக்கும் நடவடிக்கை(?)என்று சொன்னால், போராட்டத்தில் சம்பந்தப்படாது ஒதுங்கிக்கொள்வதற்காகக் காட்டும் புதிய கண்டுபிடிப்பே பு.க. வின் அழிவு அரசியல் என்றும் சொல்லிக் கொள்ளலாம்தானே? ஆனால் அப்படிச் சொல்லுவதைப் பு.க. ஏற்றுக்கொள்வாரா? தமது இருப்பை நியாயப்படுத்த பலர் போராட்டத்தின் தோல்வியைப்பற்றிப் பேசுவதுபோல,விரக்தியுற்றது போல நடிப்பது போலவே(மேற்கு நாடுகளிலிருந்து தூண்டிலுக்கு கிடைக்கும் பல வாசகர் கடிதங்களிலும், சில ஆக்கங்களிலும் கூட இதைப் பார்க்கலாம்!) இதுவும் என்று சொல்லலாமா?

விவாதத்தைக் கருத்துகளால் எதிர்கொள்ளும் இயலாமை ஏற்படும்போது இப்படி சில அம்புகளை எய்வதும் ஒரு விவாதப்பாணிதான்! ஆனால் இம் மாதிரி அம்புகளைப் பாவிக்கும்போது கவனமாக இருக்க வேண்டும்.ஏனென்றால் இவை செல்கிற இலக்கு சரியானதாக இல்லாவிடில் எய்தவரையே தாக்கிவிடும்!!

ஒன்றில் அழிவு அரசியலை விளக்கவேண்டும்;அதன் போக்குகளைத் தெளிவாக்க வேண்டும்;அதிலிருந்து விடுபடுவதற்கான வழிகளை ஆராயவேண்டும். அல்லது அந்த அழிவு அரசியலுக்கு மாற்றான(முடிந்தால்) அரசியலை முன் வைக்கவேண்டும்.

இரண்டுமற்ற ஆத்திரம் ஒன்றையும் சாதிக்காது.தனிப்பட்டரீதியிலும் சரி,பொதுவாகவும் சரி !!!

ஒப்பாரி வைப்பதும்,ஒதுங்கிப் போவதும்,இலங்கையரசில் வெடிப்பை ஆராய்வதும்,புலிகளைப் பற்றிப் பேசினால் 'சிங்கத்தை' விட மோசமாகக் கர்ச்சிப்பதும் எல்லாம் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் உள்ள சுதந்திரங்கள். ஆனால் இவை மக்களுக்கு வழி காட்ட உதவாது. அதற்குப் புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழியைக் காண நிலைமை பற்றிய மதிப்பீடு தேவை .ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் நிலவும் பிரதான போக்கு எது ,அது குறித்த அரசினதும் பல்வேறு வர்க்கங்களதும் எதிர்வினைவுகள் என்ன ,மக்களதும் தேசத்தினதும் விடுதலைக்கான எமது நோக்கிற்கு எதை அடிப்படையாகக்கொள்ளவேண்டும் என்ற விதத்தில் மதிப்பிடவேண்டும்.இல்லாவிட்டால் கொள்ளிக்கட்டையைக் கொடுக்காவிட்டால் அவன் கொளுத்தமாட்டான் என்று நம்பும் அப்பாவி வயோதிபருடன் சேர்ந்துகொள்ள வேண்டியதுதான்.

பு.க குறிப்பிட்ட வயோதிபருக்கு அபிப்பிராயம் சொல்லமட்டுந்தான் முடியும்.அடுத்தது முக்கியமில்லை.பு.கணபதிப்பிள்ளை அவர்களும் அப்படித்தானா?

— இ.நமச்சிவாயம் (ஈழம்)

---

சில திருத்தங்கள்

கலம் 42இல் பிரசுரமான பு.கணபதிப்பிள்ளையின் "இன்றைய யுத்தம்" கட்டுரையில் இடம்பெற்றுவிட்ட எழுத்துப் பிழைகள்:

| பக்கம் | பந்தி | வரி | திருத்தம் |
|---|---|---|---|
| 18 | 01 | 10 | ஐக்கியப்படுத்தாமல். |
| 19 | 02 | 04 | எதிர்பார்ப்பது |
| 22 | 01 | 03 | என்பதில் இருந்தும்தான் |

---



# நூல் அறிமுகம்




தொடர்புகளுக்கு

**Chanchive**
**Post Box 1208**
**7500 Holstebro**
**Denmark**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## செய்திக் குறிப்பு

01.07.1991 வீரகேசரி

ஐ.நா. மேற்பார்வையில் சகல இலங்கைத் தமிழர்களையும் திருப்பி அனுப்ப வேண்டும். – வாழப்பாடி

இந்தியாவில், அகதி முகாம்களுக்கு வெளியேயுள்ள சகல இலங்கைத்தமிழர்களும் 1 வார காலத்திற்குள் தங்களது விபரத்தைப் பொலிஸில்–பதியவேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு தங்க இடம் கொடுத்திருக்கும் வீட்டுச் சொந்தக்காரர்களும் விடுதி உரிமையாளர்களும்கூட அவர்களது விபரங்களை பொலிஸில் தெரிவிக்க வேண்டும்.

நொச்சிமோட்டையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விஸ்தரிக்க முயன்ற புளொட்டுடன் புலிகள் மோதியதில் 4பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐ.தே.க. கடந்த 13 வருடங்களாக இந்நாட்டை ஆட்சிசெய்துவருகின்றது. இந்த 13 வருட காலத்தில் நடைபெற்ற பல தேர்தல்களில் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் முழு ஆதரவையும் ஐ.தே.க.வுக்கே வழங்கினார்கள். ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் எந்தவொரு பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை – ல.தோ.தொ.யூ

02.07.1991 வீரகேசரி

கொழும்பு செட்டியார் தெருவிலே 100 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜே.வி.பி. தலைவர் ரோகணவிஜேவீரவின் சுமார் 10 இலட்சம் பெறுமதியான சொத்துகள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன.

03.07.1991 வீரகேசரி

சென்னையில் இலங்கைத் தமிழர்களின் வீடுகள் தீவிர சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன. கடிதங்கள் உடைத்துப் பார்க்கப்படுவதுடன், தொலைபேசிகளும் ஒட்டுக் கேட்கப்படுகின்றன.

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த நகரசுத்தித் தொழிலாளர்கள் இளைப்பாறியவுடன் அவர்கள் குடியிருக்கும் லயன்களிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

06.07.1991 வீரகேசரி

கண்டி நகரிலுள்ள தமிழர் வர்த்தக நிலையங்களிலும், கண்டிப் பிரதேசத்தில் வாழும் தமிழர் வீடுகளிலும் நிரந்தரமாக வசிப்போர் மற்றும் தற்காலிகமாக வாழ்வோர் பற்றிய பூரண விபரங்கள் அடங்கிய தகவல்களைப் பொலிசார் வீடு வீடாகச் சென்று திரட்டி வருகின்றனர்.

07.07.1991 வீரகேசரி

பயங்கரவாத நடவடிக்கைகளின்காரணமாக இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை சுமார் 17 இலட்சம். 15 மாவட்டங்களிலுமுள்ள அகதிமுகாம்களின் எண்ணிக்கை 415.

மேல்மாகாணத்தில் தற்காலிகமாக தங்கியிருப்போர் தம்மை 14நாட்களுக்குள் பொலிஸில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்பின் வீடுகள், விடுதிகளில் சோதனை நடைபெறவுள்ளது.

08.07.1991 வீரகேசரி

பொலநறுவையில் புதூர் கிராமத்தில் 25 முஸ்லீம் பொதுமக்கள் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இக் கிராமத்திற்கு அருகிலுள்ள புதபொலவில கிராமத்தில் 11 சிங்களமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

10.07.1991 வீரகேசரி

மட்டக்களப்பு 12,13ஆம் கொலனியில் ஊர்க்காவற்படையினரால் நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து 300 தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக வெளியேறியுள்ளன.

12.07.1891 வீரகேசரி

சர்வதேச நாணயநிதியம், உலக வங்கி என்பனவற்றின் திர்ப்பந்தத்தினால் பஸ் போக்குவரத்தை முற்றாகத் தனியார்துறைவசம் கைய





www.tamilarangam.net

www.tamilarangam.net

விக்க அரசு உத்தேசித்துள்ளது.

மன்னார் ஊடாக தலைமன்னார் வரை ஒவ்வொரு மைல் தூரத்திலும் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புலிகளுக்கு எதிராகப் போரிடஆயுதங்கள் தரும்படி புளொட் கேட்கவுள்ளது. இந்தியாவிலிருந்து புளொட் உறுப்பினர்கள் பலர் வந்திருப்பதாகவும், தமது இயக்கத்தைச் சேர்ந்த 2ஆயிரம் பேருக்குத் ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும் என்றும் புளொட் தெரிவித்துள்ளது.

கொழும்பில் புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க புளொட், ஈ.பி.டி.பி., ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியன கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இனந்தெரியாத கப்பல் ஒன்றில்வந்த 31 இலங்கையர்கள் தூத்துக்குடி துறைமுகத்தில் அநாதரவாக இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

11.07.1991 வீரகேசரி

முற்று முழுதாக அழிக்கப்பட வேண்டிய படுபிற்போக்குவாத புலிகளின் பேச்சுவார்த்தை அழைப்புக்குப் அரசு செவிசாயாது தொடர்ந்த இராணுவ நகர்வுகளை தளர்த்த- வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றோம். – புளொட்

இரத்தினபுரிப் பகுதியைச் சேர்ந்த தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் குடியிருப்புகள் கடந்த 50 வருடகாலமாக திருத்தியமைக்கப்படாமலுள்ளன. அவை எந்த நேரத்திலும் இடிந்து விழலாம் என்றநிலையில் தோட்டத் தொழிலாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

12.07.1991 வீரகேசரி

வடக்கு, கிழக்கில் ஆரம்பமானமோதல்களைத் தொடர்ந்து பாதுகாப்புத் தேடி அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து கொழும்புக்குச் சென்ற இளைஞர்களில் பலர் கொழும்பில் இடம்பெறும் கைதுகளினால் மீண்டும் தத்தமது பகுதிகளுக்கே திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

முஸ்லீம்களைப் பகைத்து தமிழர்களோ, தமிழர்களைப் பகைத்துமுஸ்லீம்களோ இங்கு நிச்சயம் நிம்மதியாக வாழ முடியாது. தீய சக்திகளில் தமிழர்களாயிருந்தாலென்ன, முஸ்லீம்களாயிருந்தாலென்ன முறியடிக்கப்படவேண்டியவர்களே. தீவிரவாதிகளே நீங்கள் அரசியல்வாதிகளைக் கொல்லும்போது அதில் நியாயம், அநியாயம் இருக்கலாம். ஆனால் அப்பாவிகளைக் கொல்வதற்கு எந்தவித நியாயமும் கூறமுடியாது – ஹிஸ்புல்லா

13.07.1991 வீரகேசரி

கிண்ணையடியில் நடாத்திய தேடுதலில் இராணுவத்தினர் 14 தமிழர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர். இப்படிக் கொல்லப்பட்டோரில் அதிகமானோர் அயல்கிராமங்களிலிருந்து அகதிகளாக வந்து தங்கியிருந்தோராவர்.

இன்று பாதுகாப்புப்படையினர் நல்ல முன்னேற்றமானமுறையில் காணப்படுவதற்கு இஸ்ரேல் தொடர்பும் ஒரு காரணமே. ப்ாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் உள்ள சுதந்திர வர்த்தக வலயத்தில் இஸ்ரேல் ஆயுத உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு – ஆலோசிக்கப்பட்டது. இதில் தயாரிக்கப்படும் ஆயுதங்கள் உள்நாட்டுப் பாவனைக்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் ஆலோசிக்கப்பட்டது– முன்னாள் பாதுகாப்பமைச்சின் செயலாளர் சேபால ஆட்டிகல.

14.07.1891 வீரகேசரி

வடக்கில் ஊரடங்குச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதால் உணவு பொருட்களுக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ள 500தொன் உணவையும் யாழ் அரசாங்க அதிபர் எடுத்துச்செல்ல புலிகள் தடைவிதித்துள்ளனர்.

15.07.1991 வீரகேசரி

மாத்தளைக்கும், கண்டிக்கும் இடை- யேயுள்ள கெலபொக்க தோட்டத்திலுள்ள 5 லயன்களைச் சேர்ந்த பல காம்பராக்கள் இயந்திரத்துப் பாக்கிகளுடன் வந்த இராணுவத்தினரால் கொள்ளையடிக்கப்பட்டுள்- ளன.

அரசியல் அநுபவமும், திறமையும் – கொண்ட ஜனாதிபதி பிரேமதாச மாத்திரமே நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான அரசியல் தைரியத்தையும், அறிவு – நோக்கத்தையும் கொண்டிருக்கமுடியுமென ஈ.பி.ஆர்.எல்.எவ் எந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வித உத்தேசத்திற்கும் இடமின்றி திடமாக நம்புவதாக அறிவித்துள்ளது.

வீட்டுக்குள் சமையல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது எவ்வித முன்னறிவித்தலுமின்றி வீட்டுக் கூரையைத் தோட்ட நிர்வாகம் அப்புறப்படுத்தி மேற்படி குடிமனையில் வசித்து வந்த தொழிலாளர் குடும்பத்தையும், அவர்களுக்குச் சொந்தமான உடைமைகளையும் கடந்த 2 வார காலமாக அடைமழையில் நனைய விட்டு வேடிக்கை பார்க்கும் அடாவடித்தனம் எட்டியாந்தோட்டையில் நடைபெற்று வருகிறது.

17.07.1991 வீரகேசரி

பருத்தித்துறை, வல்வெட்டித் துறை கடற்பகுதியிலிருந்து கடற்படையினர் சமீப நாட்களாக பொதுமக்களை நோக்கி ஷெல் அடிப்பது அதிகரித்துள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் பெருந் திகிலுடன் வாழ்கின்றனர். இத் தாக்குதல்களில் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த கணவன், மனைவி, பிள்ளைகள் ஒரே நாளில் கொல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நிலவும் பதற்ற சூழ்நிலையைப் பயன்படுத்தி வீட்டுச் சொந்தக்காரர்கள் தமது வீடுகளில் வாடகைக்குக் குடியிருப்போர்களை வெளியேற்றி வருகின்றனர். ஒருசிலர் தங்கள் வீடுகளில் குடியிருப்போர் புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் அவர்களைப் பிடிக்கும்படியும் பொலிசாருக்குத் தகவல் கொடுத்து வருகிறார்கள்.

19.07.1991 தாயகம்

மொன்றியலில் உலகத் தமிழர் இயக்க முக்கிய பிரதிநிதிகள் சிலர் கனடியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். முன்னர் நடந்த இசைநிகழ்ச்சியொன்றின் பார்வையாளராகக் கலந்துகொண்டஒருவரை உலகத் தமிழர் இயக்கப்பிரதிநிதிகள் பலர் ஒன்று கூடித்தாக்கியதாகவும், கடந்த வாரம் அதே வாலிபர் மீண்டும் உலகத் தமிழர் இயக்கப் பிரதிநிதிகளால் தாக்கப்பட்டதாகவும் இதன் தொடர்ச்சியாக இவர்களை பொலிசார் கைதுசெய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

19.07.1991 வீரகேசரி

இலங்கையில் யுத்தம் செய்வதற்கு-நிதி திரட்டுவது போன்ற புலிகளின் நடவடிக்கைகளைத் தடை செய்யுமாறு கனடியப் பிரதமரைக் கோரும் கடிதத்தை ஈ.பி.டி.பி. கனடியத் தூதரகத்தில் கொடுத்துள்ளது. கனடாவில் வெளியிடப்படும் புலிகளின் "உலகத் தமிழர்" என்ற பத்திரிகை புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தூண்டி விடவே முற்று முழுதாகப் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

21.07.1991 வீரகேசரி

மன்னார்த்தீவில் கடந்த ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் 154 பேர் பாதுகாப்புப்படையினரால் சந்தேகத்தின் பேரில் கைதாகியிருந்த – போதிலும் 29பேர் மாத்திரமே விடுவிக்கப்பட்டுள்ளனர். எஞ்சியோர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? என்ற விபரங்கள் தெரியவில்லை.

22.07.1991 வீரகேசரி

இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்பட்ட நவரெலியாப் பகுதி தோட்டத்தைச் சேர்ந்த 9 தமிழர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தாங்களே எனக் கூறிவரும் புலிகள் அதைத் தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு நாட்டுக்கும் உலகுக்கும் நிரூபிப்பதற்கான வாய்ப்பை அளிக்க நான் தயார்–பிரேமதாச

வடக்கு, கிழக்கில் இதுவரை சுமார் 1 இலட்சம் பேரும், தென் பகுதியில் 50ஆயிரம் பேர்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். இவ்வருட இறுதிக்குள் இத்தொகை 2 இலட்சமாக-லாம். ஐ.தே.க. கட்சிக் காலத்தில் நடைபெற்ற சாதனை இதுதான் –மக்கள் சுதந்திர முன்னணி

23.07.1991 வீரகேசரி

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலையடி வேம்பு அகதி முகாமில்வாழும் அகதிகள் உணவின்றிப் பட்டினியால் வாடுகின்றனர். இங்கு தங்கியுள்ள 835 தமிழ்க் குடும்பங்களின் 414 பெண்கள் கடந்தவருடன் ஜூன்மாதம் ஆரம்பித்த மோதல்களில் தங்கள் கணவரை இழந்தவர்கள்.

கல்முனை அகதிமுகாம் தீப்பற்றிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டதால் அங்கு தங்கியிருந்த 10 பெண்கள் உட்பட 13 பேர் நெருப்பில் வெந்து மாண்டுள்ளார்கள். 5 கொட்டில்கள் முற்றாக எரிந்துள்ளன.

இந்தியாவில் தங்களைப் பொலிஸிலே பதிவு செய்யாத 2 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

25.07.1991 வீரகேசரி

தமிழ்நாட்டில் இப்பொழுது வசிக்கும் எல்லா இலங்கைத் தமிழர்களையும் இலங்கைக்குத் திருப்பியனுப்பவேண்டும். இந்தியத் தமிழர்களுக்கும், யாழ்ப்பாணத் தமிழர்களுக்குமிடையில் மொழியைத் தவிர வேறு ஒற்றுமைகள் இல்லை—ராமமூர்த்தி

மன்னார் மாவட்டத்தில் கடும் வரட்சி நிலவுவதால் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் சுகாதாரம் சரியாகப் பேணப் படமுடியாததால் 1 மாதத்தில் மாத்திரம் 30 அகதிகள் நோயினால் மரணமாகியுள்ளனர்.

26.07.1991 வீரகேசரி

இராணுவப்படைக்கு மேலும் ஆட்கள் சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அம்பாறையில் வன்முறைகளினால் — பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான பயிற்சி ஆசிரிய நியமனங்கள் யாவும் இனவாத அடிப்படையில் சிங்களவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இடைநிறுத்தப்பட்டிருந்த பி.சி.சி.ஐ. வங்கிக் கிளைகளின் நடவடிக்கைகைகள் சீலான் வங்கியின் மேற்பார்வையின் கீழ் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தங்களது சொந்த இடங்களுக்குத் தாமாகவே திரும்பிச் செல்லக்கூடியளவுக்கு இலங்கையில் அமைதியான ஜனநாயகபூர்வமான சூழ்நிலை தோன்ற இந்தியா தனது ஒத்துழைப்பை நல்கவேண்டுமென இலங்கைப் பாராளுமன்ற சபாநாயகர் தலைமையில் லண்டன் சென்ற அரசாங்கத் தூதுக் குழுவில் இடம்பெற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். எம்.பி தெரிவித்துள்ளார்

27.07.1991 வீரகேசரி

கொழும்பிலுள்ள தமிழர்களின் பெயர், விபரங்கள் பொலிஸ் நிலையங்களில் பதியப்பட்டிருப்பதையடுத்து, அவர்கள் மத்தியில் பயம் ஏற்பட்டிருக்கிறது. 83 ஜூலையில் தமிழர்களின் வீடுகள் தாக்கப்படுவதற்கு முன்பாக அவற்றின் விபரங்கள் இப்படி திரட்டப்பட்டதே இதற்குக் காரணம்.

28.07.1991 வீரகேசரி

வடக்கு, கிழக்கிலுள்ள புலிகளின் முகாம்களில் ஏனைய அரசியல் கட்சிகளின் அமைப்புகளைச் சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களும், உறுப்பினர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாயும், அவர்களில் பலர் சிகிச்சையின்றிக் காயங்களுடன் இருப்பதாகவும் அவர்களை விடுவிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் — செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிஸில் புலிகள் இயக்கத்திற்கு காசு கொடுக்க மறுத்த ஆனந்தன் என்பவர் புலிகளின் நிதிப்பொறுப்பாளர்களான சிவபாதம், மகேந்திரம், சிவனேசன், சிவராஜா ஆகியோரால் தாக்கப்பட்டதுடன் இவரின் நண்பர்களான சிவா, மோகனமூர்த்தி, ஸ்ரீ ஆகியோர் மேற்படி புலி இயக்கப் பிரதிநிதிகளால் கத்தியால் குத்தித் தாக்கப்பட்டுள்ளனர்.

29.07.1991 வீரகேசரி

கொழும்பு கிராண்ட்பாஸ் புதிய பாலத்திற்கு அருகில் 28 குடிசைகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. இக்குடிசைகளில் அன்றாடம் தொழில் செய்து பிழைக்கும் இந்திய வம்சாவளியினரும், முஸ்லீம் குடும்பங்களும் வசித்து வந்தன.

புத்தளம் முகாம்களில் தங்கியிருந்த முஸ்லீம் அகதிகளில் 97பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு 4 மாதங்களுக்கு மேலாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

31.07.1991 வீரகேசரி

நாட்டின்மீது இருளைப்படியவைக்கும் வடக்கு, கிழக்கு நெருக்கடியைத்தீர்த்துவைக்க உதவி செய்யுமாறும், வழிகாட்டுமாறும் பிரேமதாச மகாசங்கத்தினருக்கும், ஏனைய மத குருமாருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளர்.

www.tamilarangam.net

சிறுகதை



# பாண்

திடீரென அவன் உறக்கம் கலைந்துவிட்டது.நேரமோ இரண்டரை.

யாரோ குசினிக்குள் கதிரையொன்றில் தட்டுப்பட்டிருக்க வேண்டும் .அந்தச் சத்தத்திலேயே விழித்துக்கொண்டு யோசித்தான் அவன்.குசினிக்குள் ஏதாவது கேட்கிறதாவென்று காதைக் கூர்மையாக்கினான். சத்தமெதுவுமில்லை. பூரண அமைதி!

கட்டிலில் தன் அருகில் தடவிப் பார்த்தான்.காணவில்லை. அவளுடைய மூச்சுக் கேட்கவில்லை. அதுதான் இந்த அதீத நிசப்தத்திற்குக் காரணம்.

கட்டிலை விட்டு எழுந்து,இருட்டிலே குசினிக்குள் நுழைந்தான். அங்கே இருவரும் ஒருவரை ஒருவர் கண்டுகொண்டனர்.

நேரமோ இரண்டரை!

குசினி அலுமாரியில் ஏதோ வெள்ளையாகத் தெரிந்தது.லைற்றைப் போட்டான்.படுக்கைக்குரிய மேலாடைகளில் இருவரும் எதிரெதிராக.

நள்ளிரவு!
இரண்டரை மணி!!
குசினிக்குள்!!!

குசினி மேசையில் கோப்பையொன்று இருக்கிறது. பாண் வெட்டியிருப்பது அவனுக்குத் தெரிந்தது.கத்தியும் கோப்பைக் கருகில் இருக்கின்றது.மேசை விரிப்பில் பாண் குறுனல்கள்.

படுக்கைக்குப் போக முதல் அவள் எப்பொழுதும் மேசை விரிப்பைச் சுத்தம் செய்வாள். ஒவ்வொருநாளும்.ஆனால் இப்போது மேசை விரிப்பில் பாண் குறுனல்கள்.கத்தியும் வெளியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிடக்கிறது.

குசினி நிலத்திற்குப் போட்டிருந்த தரைவிரிப்பில் இருந்து குளிர் மெல்ல மெல்ல அவள் உடம்பின் மேல் ஊர்ந்தூர்ந்து ஏறுவதை உணர்ந்தாள்.கோப்பை மேல் குத்திட்டு நிற்கும் தன் பார்வையை விலக்கினாள்.

"இங்கதான் ஏதோ..."என்றவாறே குசினியைச் சுற்றித் தலையை அசைத்தான் அவன்.

"எனக்கும் ஏதோ சத்தம் கேட்டது" பதிலுக்குக் கூறிக் கொண்டே.... இரவில் இந்த உடையில் இவன் நல்ல வயதாளியாகத் தோன்றுகிறானே... அறுபத்து மூன்று... பகல் வேளைகளில் சிலசமயம் வயது குறைந்தவனாகத் தோன்றுவானே என்று எண்ணிக்கொண்டாள்.

இவள் வயது போனவள் மாதிரி இருக்கிறானே;இந்தச் சட்டையில் இன்னும் வயதானவவளாக... சிலவேளை தலைமயிர் தான் இத் தோற்றத்தைக் கொடுக்கிறதோ?.. என்று மனதில் கணித்தவனாய்...

"நீ காலுக்கு ஏதேனும் போட்டிருக்க வேணும்.இப்படி வெறுங்காலோட இந்தக் குசினி நிலத்தில நிண்டாத் தடிமல் பிடிக்கப் போகிறது"

அவளோ அவனைப் பார்க்கவில்லை.அவன் பொய் சொல்லுவதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை .முப்பத்தொன்பது வருடத் தாம்பத்தியத்தில் இன்று அவன் பொய் சொல்கின்றான்.

"இங்கதான் ஏதோவொண்டு.. "மீண்டும் சொன்னபடி ஒரு மூலையில் இருந்து மறுமூலை வரை எத்தேவையுமின்றி மீண்டும் பார்த்தான்.

"இங்க ஏதோ சத்தம் கேட்டது.இங்கதான் ஏதோவெண்டு நினைச்சன்..."

"எனக்கும் ஏதோ கேட்டது. ஆனா இப்ப இங்க ஒன்றையும் காணேலை"

மேசையிலிருந்து கோப்பையை எடுத்து பாண் குறுனல்களை விரிப்பிலிருந்து கீழே தட்டினாள்.

"சீ, ஒன்றையும் காணேலை. "அவளையே பிரதிபலித்தான் .உறுதியற்று ஒலித்தது அவன் குரல்.

"வா படுப்போம்.வெளியிலைதான் ஏதோ நடந்திருக்கவேணும்.வா வா படுப்போம்.இந்தக் குளிர் நிலத்திலை நிண்டா உனக்

www.tamilarangam.net

குத் தடிமல் வந்திடும்"அவனுக்கு உதவிக்கு வந்தான்.

அவன் யன்னலைப் பார்த்தான்."ஏதோ வெளியிலைதான் நடந்திருக்க வேணும் .நான் இங்க ஏதோவெண்டு நினைச்சன்"

அவனது கை லைற்றை நிற்பாட்டச் சுவிச்சுக்குப் போனது. உடனே லைற்றை நிற்பாட்ட வேண்டும்.இல்லாவிட்டால் கோப்பைக்குத்தான் எனது பார்வை போகும்.கோப்பையைப் பார்க்கவே கூடாது என்று மனதிற்குள் நினைத்தவாறே... "வா வா..". லைற்றை அணைத்தான்.

"வெளியிலைதான் ஏதோ நடந்திருக்கவேணு ம் .கூரையிலை தன்ரனி கிழ வாற பீலி எப்பவும் காத்துக்குச் சுவரிலை அடிபடுறது. கட்டாயம் பீலிதான்.காத்துக்கு எப்பவும் அதுதான் படபடக்குது"

இருவரும் இருள் மண்டிய விறாந்தையைக் கடந்து மெதுவாகப் படுக்கையறைக்குச் செல்ல, தரையில் அவர்களது வெறுங்கால்கள் நடக்கும்போது பெரிதாகச் சத்தம் போட்டது.

"காத்துத்தான்.. இரவு முழுக்க ஒரே காத்து..."

இருவரும் படுக்கையில் சாய்ந்த பின்னர் அவள் சொன்னாள் "ம்,இரவு முழுக்க ஒரே காத்துத்தான்.பீலிச் சத்தம்தான் கேட்டிருக்க வேணும்"

"... ம்,நான் நினைச்சன் குசினிக்குள்ளையெண்டு. ஆனா பீலிச் சத்தம்தான் கேட்டிருக்க வேணு ம்..."அரைத் துக்கத்தில் சொல்பவன்போல் அவன் கூறினாலும் பொய் சொல்லுவதால் எவ்வளவு போலித்தனமாக அவன் குரல் இருக்கிறதென்பதை அவளால் அவதானிக்க முடிந்தது.

"சரியாய் குளிருது" சிறிய கொட்டாவியுடன்.

"நான் போர்வைக்குள் பூரப் போறன்.நிம்மதியாய் படு"

"நீயும் நிம்மதியாய்ப் படு"

நீண்ட அமைதி. பல நிமிடங்களுக்குப் பின்,மிகவும் அவதானமாக,மெதுவாக அவன் வாய்க்குள் வைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருப்பதை அவளால் கேட்க முடிந்தது.

தான் இன்னும் நித்திரையாகவில்லை என்பதை அவன் அறியக் கூடாதென்பதற்காக ஆழமாக,ஒழுங்காகத் தூக்கத்தில் இருப்பவளைப் போலச் சுவாசித்தாள். ஆனால் அவனது நேர இடைவெளி ஒழுங்கான மெல்லுகை

www.tamilarangam.net

மெதுவாக அவளை நித்திரையாக்கிவிட்டது.

மறுநாள் மாலை அவன் வீட்டிற்கு வந்தபோது,அவனுக்கு வழமைக்கு மாறாக நாலு துண்டுப் பாணை வெட்டி வைத்தாள் அவள். மற்றும்படி எப்பொழுதும் மூன்று துண்டுகள் மட்டுமே சாப்பிடலாம்.

"பிரச்சினையில்லை.நீ நாலு சாப்பிடலாம்" மேசை மீது குவிந்திருக்கும் விளக்கின் வெளிச்சத்திலிருந்து அவள் விலகினாள். "எனக்கு இப்ப பாண் ஒத்துவருகுதில்லை.நீ ஒரு துண்டு கூடச் சாப்பிடு.எனக்கு இது ஒத்து வருகுதில்லை"

அவன் கோப்பையை நோக்கித் தலையைத் தொங்கப் போட்டிருந்தான்.நிமிர்ந்தே பார்க்கவில்லை. இந்தக் கணத்தில் அவனைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது அவளுக்கு.

"நீ ரண்டு துண்டு மட்டும் சாப்பிட்டாக் காணாது"தன் கோப்பையை நோக்கிக் குனிந்தவாறே கூறினான்.

"எனக்குக் காணும்.பின்னேரத்திலை பாண் எனக்கு அவ்வளவு நல்லதாய் செமிக்குதில்லை.நீ சாப்பிடு.சாப்பிடு"

நீண்ட நேரத்தின் பின்னர் லைற் தொங்கும் அந்த மேசையில் அமர்ந்தாள்.

மூலம்:
**Wolfgang Borchert**
ஜேர்மன் மொழி
மூலம் தமிழில்:
- நா.நிருபா
- சுசீ

---

முதலாம் உலக யுத்த முடிவில் பிறந்து இரண்டாம் உலக யுத்த முடிவில் இறந்துபோன வொல்வ்கங் போஷேற் வாழ்ந்த காலம் 26 வருடங்கள். மனித உறவுகள் சிதிலமடைந்து ,தாம் வளர்த்த பூனைகளையே சாப்பிடவேண்டியிருந்த அவலமான யுத்தநிலைமைகளை, கொடுமைகளைத் தன் வாழ்வினூடாக அநுபவித்த இவரது சிறுகதைகள் ஜேர்மன் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்கன.

---

---

பின்னட்டை அறிவித்தல்
\# \# \# \# \# \# \# \# \# \#
இலங்கையிலிருந்து வெளியாகும் "சரிநிகர்" மாதப் பத்திரிகையின் இதழ்4இல் பிரசுரமான ஆசிரியர் தலையங்கத்திலிருந்து.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கி.பி.2000

18.11.1989
களத்தை மயானம்
ஒரு கணத்தில்
காரைதீவுக்கு இடம்பெயர்ந்தது.

மழைநீர் குளிப்பாட்டி
வெயில் கபனிட்டு
44 ஜனாஸாக்களை
நாங்கள்
பெற்றுக்கொண்டோம்.

உடல்களின் பொத்தல்களையும்
உடல்களுக்குள் ஒளித்திருந்த
இந்திய ரவைகளையும்
எண்ணிப் பார்த்தோம்.

முஸ்லிம் பெண்களின்
கண்ணீர் துளிகளைச்
சேகரித்துப்
பன்னீர்ப் போத்தல்களாய்த்
தெளித்து
ஊருக்குள் தூக்கிவந்தோம்.

சரணடைந்து
உயரே தூக்கியிருந்த
88 கரங்களையும் மடக்கி
மார்பில் வைத்து
மடக்கிக் கட்டினோம்.

44 அல்ல,
ஒரே ஒரு பெரிய குழிவெட்டி
பாய்க்குள் சுற்றி இறக்கி
மண் மூடினோம்.

பசுந்தளைகளை நட்டு
நீர் தெளித்து
ஜனாஸாத் தொழுது
வீடு வந்தோம்.

www.tamilarangam.net

பார்ளிமெந்துகள்,குரஸ்கள்,
அறிக்கைகள்,விவாதங்கள்,
பத்திரிகைகள்,வானொலிகள்,
..............................................
..............................................
..............................................

கி.பி.2000 பிறக்கும்.
பிறக்கும் சந்ததிக்கு
வாக்குமூலம் கொடுக்க
பள்ளிவாசல்களில்
''நடுகஸ்'' பொழிந்துவிட்டோம்.

இனி.....?
இனி.....?
எங்கே
என்னுடைய ஏ.கே.47?

**
அபு இஃஸாப் (இலங்கை)

---

[E.P.R.L.F., E.N.D.L.F., T.E.L.O. இயக்கங்களினால் அமைக்கப்பட்ட T.N.A ஆயுதக் குழுவால் 1989 நவம்பர் மாதம் கிழக்கு மாகாணத்தில் படுகொலை செய்யப்பட்ட 44 முஸ்லீம் பொலிஸ்காரர்களின் நினைவாக முஸ்லீம்கவால் வெளியிடப்பட்ட பிரசுரத்திலிருந்து...]




www.tamilarangam.net

ஜே.ஒ.சி. கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு முன்னால் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தை யடுத்து அரசுக்குப் பெருந் திகில் ஏற்பட்டிருக்க வேண்டும்.வடக்கு கிழக்கிலிருந்து கொழும்பு வந்திருக்கும் அனைவருமே புலிகள் என்ற அச்சத்துடன் நூற்றுக்கணக்கில் இளைஞர்களைக் கைதுசெய்து கொண்டுபோய் வழமையான"விசாரணைகளைச்" செய்தது.வரதன் என்ற குண்டுவெடிப்புச் சூத்திரதாரியான புலியின் மறைவிடம் பற்றிய தகவலை அறிந்துகொள்ள வென "விசாரணைக்காகப்" பிடிக்கப்பட்ட பலர் கடுமையான,நம்ப முடியாத சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டுள்ளனர்.

சுகந்தி என்ற பெண் - இவர் தான் தலாவாக்கெலையில் வரதன் மறைந்திருந்த தகவலை பலத்த சித்திரவதைக்குப்பின் சொன்னார் என அறிவிக்கப்பட்டுள்ளது - "விசாரணை"யின்போது இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது இவர் நிர்வாணமாக்கப்பட்ட நிலையில், கைகள் இரண்டும் சிலுவையில் அறைந்ததுபோல இழுத்துக்கட்டப்பட்டு,தடிகள், இரும்பு, பிளாஸ்ரிக் குழாய்கள் போன்றவற்றால் அடித்தும், பிறப்புறுப்பில் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டதாக உள்ளுக்குள் இருந்து கசிந்த தகவல்கள் கூறுகின்றன.

பிடிபட்ட வரதன் சோடா விநியோகிக்கும் வானொன்றில் கொழும்பிலிருந்து தலவாக்கெல்லைவரை சென்று தர்மலிங்கம் என்ற ஆசிரியரால் பாதுகாக்கப்பட்டு ஒரு லயத்தில் மறைத்துவைக்கப்பட்டார் என்றும்,இத் தர்மலிங்கம் என்பவர் மலையக மக்கள் முன்னணியின் தலைவர்களுள் ஒருவர் என்றும்,இதனாலேயே சந்திரசேகரன் பொதுச் செயலாளர் காதர்,தர்மலிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றும்,பொலிசும் யூ.என்.பி.யினரும் அறிவித்துள்ளனர்.

கடந்த தேர்தல் காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ம.ம.மு.க்கும் இருந்த ஒட்டைப் பயன்படுத்தி அரசியல் ரீதியில் ஸ்ரீ






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ம.ம.மு. இரண்டையும் அம்பலப் படுத்திவிட அரசு தரப்பினர் தீவிர மாக முயன்று வருகின்றனர். தேர் தல் காலத்தில் ஸ்ரீலங்கா சு.க. ம.ம.மு.க்கு தேர்தல் நிதி உதவி அளித்ததை கூறிப் புலிகளுடன் அம்மையார் கள்ளக்கூட்டு வைத்தி ருந்தார் என்றும் அரசு தரப்பினர் எகிறிக் குதிக்கின்றனர்.

இதேவேளை புலிகளுடன் லண் டனிலும், யாழ்ப்பாணத்திலும் கள்ள மாகப் பேச்சு நடத்த தாம் முயன் றதையும், ஜனாதிபதியின் அந்தர ங்க மற்றும் வெளியுறவுச் செயலா ளர் பிரட்மன் வீரக்கோன் இதற் காகவே யாழ் செல்ல இருந்ததை யும் மூடி மறைக்க அவர்கள் இவ் வளவு தீவிரமாக முயன்றுவருகின் றனர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஸ்ரீ.சு.க.யோ எந்த அரசியல் முன்முயற்சியும் அற்ற அதே யூ.என்.பி. பாணிச் சீரழிவுக் கட் சியாக இருப்பதால் இதற்குப் பதில் சொல்லமுடியாமல் திணறுகி றது. மலையகத்தின் தனிக்காட்டு ராசாவாக தன்னை நிலைநிறுத்தி வருவதில் தீவிர ஆசையுள்ள தொண்டமான் கோஷ்டியோ, தம க்கு சவாலாக வளர்ந்து வந்த ம.ம.மு.வை இந்தச் சாட்டைப் பய ன்படுத்தி அப்புறப்படுத்திவிடலாம்– ஒதுக்கிவிடலாம் என்ற பேராசை யுடன் தலைவர்களை உள்ளேவைத் திருக்கும்படி அரசினைத் திரை மறைவில் வற்புறுத்தி வருகிறது.

கடந்த தேர்தலுக்கு முன்பும் ஒருமுறை இதே பயங்கரவாதிகள் தொடர்பைக் காரணம் காட்டி சந்திரசேகரனை கைது செய்த போது மலையகம் முழுவதும் கொதித்தெழுந்து வேலை நிறுத் தத்தில் குதித்தது தொண்டமானின் ஆசையில் மண்ணை அள்ளிப்போட் டிருந்தது. இம்முறை அவருக்கு எல் லாம் வசதியாகிவிட்டது. ம.ம.மு. யின் இந்தப் பாராளுமன்ற அரசி யல் நம்பிக்கை மாயை தொண்ட மானின் பொறியிலிருந்து அதை மீளவிடாமல் அமுக்கி வைத்திருக் கிறது...

எப்படியோ, புலிகளுடன் தொட ர்பு வைத்திருப்பதும், பேச்சுவார் த்தை நடத்துவதும் யூ.என்.பி.யை தவிர்ந்த ஏனைய கட்சிகள் செய் யக்கூடாத ஒன்று என்பதை கொள் கையளவில் சரியானதாக ஏற்றுக் கொண்டு, அதன் அடிப்படையில் இயங்குகின்ற இந்தக் கட்சிகளு க்கு இந்தக் கதி தவிர்க்க முடியா ததுதான்.

போதாததற்கு ஆனையிறவில் புலிகளுடன் அரசு யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அவர்கள் கருத்துகளை யார்தான் காது கொடுத்துக் கேட்கப்போகிறார்கள்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனையிறவு முகாமைப் பாதுகாக்கவென்று வெற்றிலைக்கேணியில் இறக்கிவிடப்பட்ட 3 ஆயிரம் படையினரும் பலத்த இழப்பின் பின்(அரச தகவலின்படி ஆயிரம் புலிகளும் 113 இராணுவத்தினரும்!) முகாமிலிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவை அண்மித்துள்ளார்கள். இந்த இராணுவத்தினர் கடந்த18 நாட்களாக நகர்ந்து இவ்வளவு தூரத்திற்கு வந்துள்ள அதேவேளை இராணுவ முகாமைச் சுற்றி இலங்கை அரசபடைகள் தம்மால் போடக் கூடியளவு குண்டுகள் அனைத்தையும் போட்டு ஒவ்வொரு சதுர அங்குலத்தையும் தாக்கிவிட்டதாகவும்,இனி அங்கு ஒரு உயிரினம் இருந்தால் அது மந்திரவித்தையால் மட்டுமே முடியும் என்றும் பேசிக்கொண்டபோதும் புலிகளின் தாக்குதல் தொடர்ந்தவண்ணமுள்ளது.பிரதேசம் பற்றிய அனுபவம் இல்லாததால் தங்களால் நினைத்தளவு வேகமாக முன்னேற முடியாதுள்ளது என்று அவர்கள் இப்போது பகிரங்கமாகவே ஒப்புக்கொள்கிறார்கள்.

உண்மையில் ஆனையிறவில் புலியிடம் அரசபடைகள் தோற்றுப் போவதற்கான சாத்தியங்களே அதிகம் உள்ளன என்று அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.கொழும்பிற்கும் ,வெளியுலகுக்கும் அரசு அறிவிக்கிறதுபோல அல்ல அங்குள்ள உண்மை நிலைமை இராணுவ முகாமுக்கு கடந்த ஒரு மாத காலமாக உணவுப்பொருட்களைக்கூடப் போடமுடியாத நிலையில்தான் இலங்கை அரசு இருக்கிறது.முகாமைச் சுற்றிவர உள்ள பகுதி வெளியாதலால் புலிகளுக்கும் முகாமை அணுகி அழிப்பது அத்தனை சுலபமான ஒன்று அல்ல. இரு புறத்தினருக்கும் இராணுவ ரீதியில் பாதகமான பகுதிதான் அது.ஆனையிறவு இந்தப் போரின் பின் ஒரு புதிய காரணப் பெயராகவும் மாறிவிடுமோ என்றுதான் தோன்றுகிறது என்கிறார்கள் வந்தவர்கள்.

"பெடியளிட்டை அன்ரி எயர் கிறாப்ட்-பிளேனைச் சுடுற துவக்கு -இருக்குதெண்டது உண்மையோ?" என்று விசாரித்தோம்.

"எங்களுக்கு தெரிஞ்சளவிலை இல்லை.நான் முரசுமோட்டையிலிருந்து வாறன்.இவங்கள் தாங்கள் தோல்வியடையிறதை நியாயப்படுத்த அப்பிடிச் சொல்லுறாங்கள்.எல்லாம் பழைய சாமான்கள்தான் வைச்சிருக்கிறாங்கள்..."

"ராஜீவ் காந்தியைச் சுட்டாப் போலை நிறையச் சாமான் கிடைச்சிருக்கெண்டு சொல்லுகினம்.உண்மையோ?"

"என்னவோ தெரியாது.அப்பிடி ஒண்டும் வித்தியாசம் தெரியேலை .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராஜீவைச் சுட்டால் ஆயுதம் கிடைக்குமெண்டு ஆரும் சொல்லியிருந்தால் அவங்கள் செய்யக்கூடிய ஆக்கள்தான்.அதிலை பிரச்சினை இல்லை.ஆனா ஆயுதம் புதிசா வந்ததாய் தெரியேலை..."

"சரி,முடிவா என்ன நடக்கும் எண்டு யோசிக்கிறியள்?"

"என்ன நடக்கப்போகுது.ஆனையிறவு காம்ப் இருக்கு மட்டும் சண்டை ஓயப்போறதில்லை.புலி தோத்துதெண்டால் ஆமி தான் நினைச்சபாட்டுக்கு நடப்பான்.இப்பவே காரைநகர்,முல்லைத்தீவு காம்ப்புகளைச் சுத்தியிருக்கிற இடம் எல்லாம் பிடிச்சிட்டான்...."

"அப்ப புலியள் வெல்லுறதுதான் நல்லதெண்டு சொல்லுறியள்"

"இதிலையென்ன நல்லதும், கூடாததும்! புலியளோடை வாழ நாங்கள் தவிர்க்கேலாமல் பழகிக் கொண்டிருக்கிறம்.ஆனால் ஆமி அப்பிடியில்லையே.அவனோடை வாழப் பழகிகொள்ளுறது ஏலாதே!"

- அவரது பதிலில் இருந்த யதார்த்தத்தைப் பற்றித் திரும்பத் திரும்ப யோசித்தபடி எனது நண்பரிடம் வந்தேன்."மக்கள் அரசியல் புத்திஜீவிகளின் மொழியில் பேசாவிட்டாலும் அவர்களது வார்த்தையில் அனுபவம் இருக்கும்.அவர்கள் ஊகங்களின் அடிப்படையில் பேசுவதில்லை.உண்மைகளின் அடிப்படையில் பேசுகிறார்கள்..." என்று ஒரு தடவை எனது நண்பர் சொன்னது ஞாபகம் வந்தது.

நீண்ட நாட்களாக - அதுவும் இந்த ஜே.ஓ.சி. குண்டுவெடிப்புப் புச் சம்பவத்திற்குப் பிறகு - நீண்ட நாட்களாக அவரைச் சந்திக்கவில்லை.சந்திக்கமுடியவில்லை .இராணுவத்தினதும்,பொலிஸினதும் தீவிரமான தேடுதல்,தமிழனாக அதுவும் யாழ்ப்பாணத் தமிழனாகப் பிறந்ததாகக் காட்டும் ஐடென்ரிற்றிக் காட்டுடன் கொழும்பில் சும்மா திரிவது சரியான கஸ்டமாகப் போய்விட்டிருந்தது.

போதாதற்கு வாடகைக்கு வீடு கொடுப்பவர்களை வேறு அரசு மிரட்டியிருந்தது.ஏற்கெனவே இருந்த வீட்டுக்காரன் எங்களை எழும்பு என்று சொல்லாக்குறையாகச் சொல்லியிருந்தான்.தனது வீடு பறிபோய்விடும் என்ற பயம் அவனுக்கு.'வீடு பறிக்கப்படும்;தண்டனை வழங்கப்படும்;உங்கள் வீட்டிலிருப்பவர் பற்றித் தகவல் தாருங்கள். அல்லது விளைவை எதிர்கொள்ளு

**சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்படுவதென்றால் என்ன?**
(அடுத்த பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ங்கள்.' என்ற பாதுகாப்பு அமைச்சின் மிரட்டலையிட்டு அவன் நன்றாகப் பயந்துபோய்விட்டிருந்தான். நாங்கள் எழுதிக்கொடுத்த தகவல்கள் உண்மைதானா என்பதை அவன் எப்படி அறிவான்?இதனால் புது வீடு தேடி ஓடவேண்டியிருந்தது.புது வீடு தேடிப் பறப்பட்டாலோ புது வீடு கேட்கிற எங்கள் ஒவ்வொருவரையும் சிவராசனாகவோ,வரதனாகவோ, மனைவியைத் தனுவாகவோ பார்க்கிற வீட்டுக்காரர்களுக்கு எதையும் விளக்க முடியவில்லை.பழைய வீட்டுக்காரனிடமே காலில் விழாக்குறையாக மன்றாடி,பொலிஸ் நிலையத்தில் பெயரைப் போடச் சொல்லி.... இத்தனைநான் மூச்சுவிடக்கூட நேரம் கிடைக்காத ஓடுப்பாடு. இன்றுதான் நண்பரைச் சந்திக்க நேரம் வந்தது.அவருக்கும் என்ன பாடோ?

நான் அவரது வீட்டிற்குப்போனபோது அவர் எங்கேயோ போகப் புறப்பட்டு வெளியே வந்துகொண்டிருந்தார்.

"நல்லவேளை.. நேரத்திற்கு வந்திட்டன்.கொஞ்சம் பிந்தியிருந்தால் உன்னைப் பிடிச்சிருக்கேலாமப் போயிருக்கும்."என்றேன் நான்.

நண்பர் சிரித்தார்."நான் நீ ஊருக்கு போயிட்டியோ எண்டு யோசித்தேன். கனநாளா இந்தப் பக்கம் காணவில்லை.உன்ரை வீட்டை வந்தால் வீடும் பூட்டியிருந்தது..." என்றார் அவர்.

"என்ன வீட்டை வந்தியா,,?"

"ஓம்.கனநாளாக் காணேல்லையெண்டு வந்தன்.வீட்டுக்காரன் சொல்லேல்லையோ?"

"இல்லை.பொதுவாலே அவனுக்கு என்னட்டை ஆக்கள் வாறது பிடிக்காது. அதுவும் இப்பிடியான நேரத்திலை எண்டால் சொல்ல வேணுமே.."

"ஏன்.. என்ன பிரச்சினை.. வீட்டைவிட்டு எழும்பச் சொன்னவனோ?"



www.tamilarangam.net

"சொன்னான்.நான் ஒடித்திரிஞ்சு பாத்தன்.ஒரிடமும் சனம் தருகுதில்லை.உனக்கு அப்பிடிப் பிரச்சினை வரேல்லையே?"

"இல்லை.என்ரை வீட்டுக்காரன் உனக்குத் தெரியுந்தானே. பச்சை யு.என்.பி. பொலிஸிலை இருந்து அவன்ரை வீட்டை வந்து ஒரு நாளும் செக்கிங் செய்ததில்லை"

"சரி,விடு.இப்ப ஒருமாதிரி ஓய்ஞ்சிருக்கு.இப்ப எங்கை வெளிக்கிட்டிட்டாய்?"

"ஒரிடமும் இல்லை.பேப்பர் பாத்திட்டு வருவமெண்டு ராமகிருஷ்ணன் ஹோல் பக்கமாத்தான். நீயும் வாவன்"என்றபடி நடக்கத் தொடங்கினார் நண்பர்.

"ஆனையிறவு தாக்குதல் எப்பிடி முடியும் எண்டு நினைக்கிறாய்?"

"முடிவு பற்றி நிச்சயமாய் சொல்ல முடியவில்லை.இவ்வளவு நாள் போராடினதே புலியளுக்கு வெற்றிதான்.இலங்கை அரசுக்கு இந்த முகாமை வைத்துப் பாதுகாப்பதில் தொடர்ச்சியான பல சிக்கல்கள் இருக்கும் என்பது மட்டும் தெரிகிறது.கோட்டை வீழ்ச்சியின் போது அது ஒன்றும் கேந்திர முக்கியத்துவமான இடமல்ல என்று அரசு சொன்னது.இப்போது இதையும் அப்படிச் சொல்லுமோ என்னவோ...விமானப்படை உணவுப்பொட்டலங்களைப் போடமுடியாதபடிக்கும், வெற்றிலைக்கேணி போன்ற வேறு குறூப்புகள் முகாமை நோக்கி வராமலும் ஒரு 3 மாதம் தடுத்துவிட்டால் கோட்டையைப் போல ஆனையிறவும் மண்கவ்வும். ஆனால் அவ்வளவு பலமும்,உறுதியும் புலிகளுக்கு இருக்கிறதா என்பதை என்னால் சொல்லமுடியவில்லை..."

"அங்கையிருந்து வாற சனம் சொல்லுது"

"என்ன சொல்லுது?" என்று வியப்புடன் கேட்டார் நண்பர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"புலியள் நிண்டு பிடிப்பாங்கள் எண்டு"

"தெரியேலை.இலங்கை அரசு தன்ரை முழு சக்தியையும் பாவிச்சு புலியளை இந்த இடத்தில் முறித்து விட முயல்கிறது.புலியளும் அப்பிடித்தான். இது இரு தரப்பாரையுமே இராணுவரீதியில் பலவீனமாக்கிற யுத்தம்..,"

"மனோபலம்..?"

"புலிகளுக்கும்,இராணுவத்திற்கும் உள்ள வித்தியாசம் ஒண்டு இந்த மனோபலம் பற்றியது.ஒவ்வொரு தோல்வியும் இராணுவத்திற்கு மனோபலம் குறையச் செய்கிறது;நம்பிக்கை அற்றுப்போகச் செய்கிறது.ஆனால் புலிகளுக்குத் தோல்வி மேலும் மேலும் எதிர்த்துத் தாக்கும் உணர்வைக் கொடுக்கிறது.இந்த உணர்வு புலிகளிடம் மட்டுமல்ல,மக்களிடமும் பரவுகிறது. பெருமளவில் புதிதாக ஆட்களைச் சேர வைக்கிறது.ஏனென்றால் தோல்வி மரண பயத்தை,முழுதான அழிவை கண்முன் நிறுத்துகிறது. புலிகளின் மோசமான தன்மைகளையும் மீறி மக்கள் ஈர்க்கப்படுவதற்கும்,போராட்டம் உத்வேகத்துடன் வளர்வதற்கும் இந்த இயக்கவியலே காரணம்.புலிகளுக்குத் தாம் பெறுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது.ஆனால் இராணுவத்திற்கு இருப்பது அலைத் தடுப்பது மட்டுமே.முழுத் தமிழனையும் அழிப்பது என்பது போன்ற கருத்துகளை ஒரு குறிக்கோளாக அரசால் முன் வைக்க முடியாது.ஈழத்திற்குப் பதில் 'இல்லை'என்று மட்டுமே அரசு சொல்கிறது.அதன் குறிக்கோள் புலியை அடக்குவது.அதற்கு மேல் எதுவும் வெளிப்படையாக இல்லை . எனவே இது தோல்வியின்போது மனோபலத்தைக் குறைக்கும்.புலிகளுக்கு அது மேலும் தீவிரத்தன்மையைக் கூட்டும்..."

"அப்ப இந்தப் போரில் புலிகள் வெல்வார்களா?"

"அதைச் சொல்ல எனக்குத் தெரியவில்லை.எனக்குத் தகவல்கள்



www.tamilarangam.net

போதாது.கொழும்புப் பேப்பர்களைப் பார்த்தால் புலி போன வாரமே தோற்றிருக்க வேணும்! மக்களை ஏமாற்றுவதில் அரசுக்குத் துணை நிற்கும் பத்திரிகைகளில் எதையும் அறியமுடியாது.முடிவுகள்தான் பதில் சொல்லவேணும்.."

"ராஜீவ்காந்தியின் கொலைக்குப் பிறகு புலியளுக்கு நிறைய ஆயுதங்கள் கிடைத்து விட்டதாகச் சொல்லுகிறார்களே?"

"நானும் கேள்விப்பட்டேன். ஆனால் எவ்வளவு ஆயுதம் கிடைத்தாலும் வெற்றியைத் தீர்மானிப்பது ஆயுதங்களல்ல,மக்கள் ஆதரவுதான். இன்றைக்கு மக்கள் ஆதரவு - போராட்டத்திற்கு -. இருக்கிறது.இலங்கை அரச படைகளுக்கு ஆதரவு தேவை - தார்மீக ஆதரவு வழங்குங்கள் - என்று கொழும்புப் பத்திரிகைகள் எழுதின போதும் அது பெரிதாக தெற்கில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.வடக்கில் புலிகள் நடாத்தும் போராட்டத்தில் ஒவ்வொரு வெற்றியும் , தோல்வியும் தம்மதாக மக்களால் உணரப்படுவதுபோல இங்கு உணரப்படுவதில்லை!இங்கு அது மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையாக இல்லை.யு.என்.பி. அப்படி ஒரு செயற்கையான உணர்வலையைக் கட்டியெழுப்ப முயல்கிறது.சிங்கள பௌத்த தேசம் என்று அடிப்படைவாதத்தை பத்திரிகை,வானொலி , தொலைக்காட்சிகளினூடாக பிரச்சாரம் செய்கிறது.மறைமுகமாக இந்தச் சிந்தனையை ஊக்குவிக்கிறது.ஆனால் இன்ற யுத்தம் மக்கள் மத்தியில் ஒரு வேண்டாத விடயமாகிவிட்டது.அதுபற்றி அதிகமாக யாரும் கவலைப்படுவதில்லை. நித்தம் சாவதற்கு அழுவார் இல்லை என்பதுபோல இருக்கிறது நிலைமை..."

"நீ இண்டைக்கு வேறைவிதமாய் பேசுறாய் போலை இருக்குது."

"இல்லை...நீயே பார்.யுத்தம் தொடங்கின நாட்களில் இங்கு இருந்த பரபரப்பும்,தடல்புடலும் இப்போது அவ்வளவாக இல்லை. ஒரு வருடத்திற்கு மேலாக தொடர்கிற இந்த யுத்தத்தைப் பற்றி யார்தான் அக்கறைப்படப் போகிறார்கள்.சும்மா கொண்டுபோய் பெடியளைப் பலி கொடுக்கிற வேலைதான் என்று அரசை வெளிப்படையாக விமர்சிக்கிறவர்களை எங்கேயும் காணக்கூடியதாக இருக்கிறது.ஆனால் அரசு இவ்வளவு நிலமைக்குப் பிறகும் அதேவேலையைத் தொடர்ந்து செய்துகொண்டு தான் இருக்கிறது..."

"எதைச் சொல்கிறாய்..?"

"இந்த இடைக்குள்ளை வெலியோயாவிலை திரும்பவும் சிங்களச் சனத்தைக் கொண்டுபோய் குடியே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ற்றி இருக்குது.திருகோணமலைப் பகுதியிலை இருந்த முஸ்லீம் ஆக்களின்ரை வீடுகளிலை கொண்டு போய் சிங்களவர்களைக் குடியேற்றியிருக்கிறது.தமிழ்ப் பகுதியெண்டு ஒண்டு இல்லையெண்ட நிலைமையை உருவாக்கிறதுதான் அரசாங்கத்தின்ரை நோக்கம்.அதை வடிவாத் தொடர்ந்து செய்துகொண்டுதான் இருக்குது.பிரேமதாச ஒரு பௌத்த மதபோதகனைப்போல அலுப்பூட்டுற விதத்திலை 'புலியளுக்கு எல்லாம் தந்துவிட நாம் தயார் என்று சொன்னோம்.அவர்கள் மறுத்து ஈழம் கேட்கிறார்கள்'என்று சொல்லிக்கொண்டு திரிகிறான் .ஆனால் அவன் சொன்ன 'எல்லாம்'என்பது சுதந்திரத்தை தவிர்ந்த 'எல்லாம்' தான்!இதெல்லாம் இஞ்சை இருக்கிற சனத்துக்கு தெரியாது.ஆனால் வடக்கு,கிழக்குச் சனத்திற்கு நல்லாத் தெரியும்.அதுதான் சொல்லுறன்.அரசாங்கத்தின்ரை வெற்றி வெறும் ஆயுத ஆட்பலத்திலை மட்டுந்தான் தங்கியிருக்குதெண்டு...."

"இப்ப புதிசா கொழும்புப் புத்திசீவிகள் மத்தியிலை அரசாங்கத்தின்ரை இனவாதத்திலை பிளவுகள் ஏற்பட்டிருக்குதெண்டு சொல்லுறவை இருக்கினமே அவைக்கு இதைச் சொல்லவேணும்.பிரேமதாசவின்ரை வருகைக்குப் பிறகு இனவாதத்தின்ரை பழைய இறுக்கம் மாறியிருக்குதாமெல்லே!"என்றேன் நான்.

சிரித்துக்கொண்டே நண்பர் சொன்னார்,"இவையளுக்கு எப்பவுமே தடுமாற்றம்தான்.இலங்கை. இந்திய ஒப்பந்தம் வந்தமுட்டம் அதைத் தமிழ்மக்களுக்கு கொஞ்சமெண்டாலும் நிம்மதி தருகிற ஒப்பந்தம் எண்டும்,அது தமிழ்மக்களுக்கு நிறைய அதிகாரங்களை வழங்குதெண்டும் சொன்னவை.இப்ப வெங்கடேஸ்வரனே சொல்லுறார் இந்த ஒப்பந்தம் வழங்கின அதிகாரங்கள் பண்டா-செல்வா ஒப்பந்த அதிகாரங்களைவிடக் குறைவெண்டு.மற்றது உந்த ஒப்பந்தம் தமிழ்மக்களுக்கு வழங்கினது என்னதான் எண்டு இவை யோசிக்கேல்லை.இந்தியாவின்ரை நலனைப் பாதுகாக்கிற நோக்கத்திலை எழுதப்பட்டதுதான் அது எண்டு அவை ஒருக்காலும் நினைக்கேலை.பிறகுதான் அவைக்கு அது விளங்கிச்சுது!"

"ஏன் இவையளுக்கு மட்டுமில்லை புலியளுக்கும் அது விளங்கேலைத்தானே?"

"புலியளுக்கு விளங்கேலைத்தான்.நான் முந்தியே சொன்ன மாதிரி அவங்கடை முறை அனுபவங்கள் மூலம் மட்டுமே கற்றுக்கொள்வதுதான்.'இந்தியா யார்?எங்களை நாட்டாண்மை பண்ண?'என்று கேட்ட புலிதான் 'இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் நலன் குறித்த அக்கறையில் எமக்கு ஆட்சேபணை இல்லை.ஆனால்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம்மை நிர்ப்பந்திக்கக்கூடாது' என்றும் சொன்னது.புலிக்கு இந்தியாவை எதிர்க்கிறதுக்கு ஒரே காரணம் தனது நோக்கத்தை அது எதிர்ப்பது மட்டுமே.மொத்தமாக அது இந்தப் பிராந்தியத்தின் சர்வாதிகாரியாக இருப்பதல்ல!இந்திய அரசின் நலன் என்பது இந்திய மக்களின் நலன் அல்ல,அது இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்.அதன் பிராந்திய நலன் என்பது தன்னைச் சூழவுள்ள நாடுகளை தனது கட்டுப்பாட்டிற்குக் கீழ் வைத்து மேலாண்மை செலுத்துவதாகும்.அந்த நலனுக்கு ஏற்றவிதத்தில்தான் அது இலங்கைப் பிரச்சினையைக் கையாளும் எண்ணடதெல்லாம் எத்தனை தடவை பேசப்பட்டது.புலியளுக்கும், இந்தப் புத்திசீவிகளுக்கும் உள்ள வேறுபாடு புலியள் அனுபவத்தில் படிக்கிறார்கள். இவர்கள் அனுபவத்தையும் படிப்பதில்லை..."

"நீ சொல்லுறது சரியா விளங்கேலை"

"இல்லை,இவங்களுக்கும் அனுபவம் வருகிறது.ஆனால் அதை இவர்கள் படிப்பினையாகக் கொள்வதில்லை.இவர்களின் நலன் நோக்கு ஒரு குறிப்பிட்ட வர்க்கம் சார்ந்த நீண்ட நோக்குள்ளதல்ல. புலிக்கு அதன் வர்க்கம் சார்ந்து அது நிற்கிறது.இவர்கள் குறிப்பான எந்த வர்க்கத்தையும் பிரதிபலிக்காமல் சார்ந்து நிற்பவர்களாக உள்ளனர்.இதனால் இவர்கள் தமது நலனை - மக்கள் நலன் என்று கூறிக்கொண்டும்,நம்பிக்கொண்டும் - தமது அந்தந்த நேர குறுகிய கால அடிப்படையில் கருத்தை வைக்கின்றனர். இவர்கள் 'உள்ளடக்கம்' பற்றிப் பேசினாலும்,வெளியே தெரியும் தோற்றத்தையே உள்ளடக்கம் என்று மயங்குபவர்கள். இந்தியாவையிட்டும், இலங்கையரசையிட்டும்,புலியையிட்டும் இவர்களது நிலைப்பாடுகள் இப்படியே. குறைந்தபட்சம் இவர்கள் தங்களது கடந்தகால நிலைப்பாடுகளை ஆராய்ந்தாலே தமது சுயவிமர்சனமற்ற தாவல்களை புரிந்துகொள்ள முடியும்.கருத்தை மாற்றிக்கொள்ளும் போது நிலவிய கருத்து குறித்த தமது விமர்சனத்தை முன்வைப்பது இவர்களுக்கு முக்கியமில்லை.மாறி நின்றுகொண்டு இன்னும் மாறாத வர்களைப் பார்த்து பரிகசிப்பது இவர்களது இயல்பு.மார்க்ஸ் சொல்வதுபோல இந்த மத்தியதர வர்க்க சனனாயகவாதி சலிப்பில்லாமல் தனது தோல்விகளையிட்டு மனம் தளராமல் தொடர்ந்து முயன்றுகொண்டேயிருக்கிறான்,,,! ஆனால் இந்தியாவும் சரி,இலங்கையும் சரி,புலியும் சரி தமது நோக்கில் செயற்படுகின்றன;முன்னேறுகின்றன. சனனாயகவாதிகளான இவர்கள் நின்ற இடத்திலேயே நின்றுவிடுகிறார்கள்"

கடற்கரைக் காற்று நில் என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகத்தில் அறைந்தது.பத்திரிகை படிக்கும் விருப்பம் போய்விட்டது நண்பருக்கு.கடற்கரையில் போயிருந்து பேசுவோம் என்று கூறிய படியே கடற்கரையை நோக்கி நடந்தார் அவர்.

"இந்தியப் பத்திரிகைகளைப் படிக்கும்போது சலிப்பும்,ஆத்திரமும் வருகிறது.அவற்றைப் படிப்பதற்காக இங்கு வந்தாலும் வந்து படிக்கத் தொடங்கியபின்தான் ஏன் வந்தோம் என்று இருக்கும்.அவ்வளவுக்கு பொய்யும்,வஞ்சகமும் கலந்த வார்த்தைகளை அவை கொட்டுகின்றன"என்று அலுத்துக் கொண்டார் நண்பர்.

"என்ன எழுதுகின்றன?"என்று கேட்டேன் நான்.

"உதாரணமாய்ப் பார்.இலங்கையிலுள்ள இனங்களுக்கிடையே உள்ள பிரச்சினையை அவை தீர்க்க முடியாமல் சிக்கித்தவித்தபோது அதைத் தீர்த்துதவ முன்வந்தவராம் இந்திரா!அவருக்குப் பிறகு அதை நடைமுறைப்படுத்த தனது சொந்தப்படையிலேயே பல நூறுபேரைப் பலிகொடுத்தும், கோடிக்கணக்கில் செலவிட்டும் முயன்றாராம் ராஜீவ்!! அவரை மிருகத்தனமாக கொன்றுவிட்டார்கள் என்கிறது ஒரு பத்திரிகை.உண்மையில் இந்தப் பத்திரிகைக்கும்,இதை எழுதியவனுக்கும் இலங்கைக்கு உதவி செய்ய தாயும், மகனும் முயன்றதெல்லாம் தமது சொந்த அரசியல் நலனுக்காக என்பது தெளிவாகத் தெரியும்.தெரிந்து கொண்டே எழுதுகிறான்.இந்த இந்தியத் தேசியவாதம் எனக்கு எரிச்சலூட்டுகிறது"

"இதைவிடவும் நிறைய எழுதுகிறார்கள்.இலங்கைத் தமிழனைக் கண்டால் காறித்துப்பாக்குறையாக தமிழ்நாட்டு மக்கள் அருவருக்கும் படியாக பிரச்சாரம் செய்கிறார்கள். எல்லாம் ராஜீ வைப் பாதுகாக்கத் தான்.கொல்லப்படுவதற்கு மிகவும் தகுதியான ஒரு அயோக்கியன் அவன் என்பதை மூடிமறைக்கிறது தான் இப் பத்திரிகைகளின் நோக்கம்.அதுதான் அப்பிடிச் செய்கின்றன"

"இந்தியா இலங்கைப் பிரச்சினையில் நடுநிலையா நடந்திருக்கமுடியும் என்று நம்புகிற கட்சிகளும்,பத்திரிகைகளும் உண்மையில் செய்வது இந்தியாவையும்,அதன் அரசையும் 'நேர்மை'யானதென்று பிரச்சாரம் செய்வதேயொழிய வேறொன்றுமில்லை"

கடலின் அலை உயர்ந்து எழுந்து வந்து கரையோடு மோதி ஓய்ந்தது. சிறுவர்களை ஓடிவிளையாட விட்டுவிட்டு அங்குமிங்குமாக சில குடும்பங்கள் உட்கார்ந்திருந்தன. இளைஞர்கள் சிகரெட்டும் கையுமாக அலைந்துகொண்டிருந்தார்கள். நாம்; வசதியாக ஒரு கல்லின்மேல்

www.tamilarangam.net

உட்கார்ந்திருந்தோம்.

"ஜாதிக சிந்தனையைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று திடீரென்று கேட்டார் நண்பர்.

"எனக்குச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை.அவ்வளவுக்கு அது தொடர்பா வெளிவந்த முழுக் கட்டுரையையும். படிக்கேலை.ஆனால் அது ஒருவகையான இனவாதச் சிந்தனை என்று மட்டும் புரிகிறது." என்றேன் நான்.

"நாங்கள் இது பற்றி விழிப்பாக இருக்கவேணும் என்று நான் நினைக்கிறேன்.இந்தச் சிந்தனை பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் புதிய புத்திஜீவித வடிவம். வெளிப்படையான இனவாதத்தை விட வித்தியாசமான ஆனால் கருவிலேயே பிற,மத,மொழி.கலாச்சாரங்களைச் சிதைக்கிற சிந்தனையைக் கொண்டதாக உள்ளது அது"

நான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.கடந்த சில மாதங்களாக கொழும்பு பத்திரிகைகளில் பரவலாக விவாதிக்கப்பட்டு வரும் இந்த 'ஜாதிக சிந்தனைய' என்ற சிந்தனையின் அடிப்படை 'சிங்கள இனத்தின் மத்தியிலிருந்து புதிய சிந்தனை எழுந்துவர வேண்டும்.ஸ்ரீலங்கா பிரச்சினைகட்கு ஸ்ரீலங்காத் தீர்வுகள் வேண்டும்'என்பதே.ஆனால் இது சாரத்தில் இனவாதமாகவே வெளிப்பட்டு வருகிறது என்பதை அதைப் படிக்கிறபோது புரிந்துகொள்ளலாம் . கலாநிதி குணதாச சமரசேகர என்ற எழுத்தாளரால் முன்வைக்கப்படுகின்ற கருத்துகளை அடிப்படையாகக்கொண்ட இந்த ஜாதிக சிந்தனைய(J.C) தற்போது பல்கலைக் கழக மட்டங்களில் அடிபட்டுவருகிறது.இம்முறை கொழும்பு பல்கலைக்கழகத்தில் மாணவபீடத் தேர்தல்களில் இரண்டு யு.என்.பி.யும்,இரண்டு ஜாதிக சிந்தனையும் வந்துள்ளது.அடிப்படையில் ஒற்றுமையுள்ள இப் போக்கினரின் ஆதிக்கமே இன்று அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் நிலவுகிறது.இந்தச் சிந்தனையாளர்கள் இலங்கை ஒரு பல்லினக் கலாச்சாரமுள்ள நாடு என்பதை ஏற்பதில்லை.இங்கு இருப்பது ஒரே ஒரு ஸ்ரீலங்காக் கலாச்சாரம் மட்டுமே என்கிறார்கள்.இந்தச் சிந்தனையின் போக்குப் பற்றி நான் அவ்வளவு ஆழமாக சிந்தித்ததில்லை.இப்போது நண்பர் கேட்டபோதுதான் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

"இந்தச் சிந்தனையாளர்கள் புலிகளை சோழர்களின் ஒரு தொடர்ச்சியாக குறிப்பிடுகிறார்கள்.புலிச் சின்னம் வேறு அவர்களுக்கு உதவியாக இருக்கிறது.புலிகளுக்கு அதன் ஆரம்பக்காலத்தில் அப்படி ஒரு எண்ணம் இருந்ததாகத்தான் சொல்கிறார்கள்.ஆனால் இன்றைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலி 'சோழப் பேரரசின் 'இன்றைய வடிவமல்ல.இதை இவர்கள் புரிந்து கொள்ளாததால் இங்கு ஒரு இனப் பிரச்சினையே கிடையாது என்று பிரச்சாரம் செய்கிறார்கள்.இது அரசியல் ரீதியில் தீர்க்கப்படமுடி யாதது என்கிறார்கள்!சண்டை பிடி க்க வேண்டியதுதான் என்கிறார்கள்!!

சிந்தனைத் துறையில் இதன் தாக்கம் முன்னைய இனவாதத்தின் மேலோட்டமான வெறியூட்டலை விட ஆழமாகச் செல்லும் வாய்ப் புள்ளது என்று தோன்றியது.முன்பு இனவாதம் பெரிதும் பிரச்சாரம் செய்யப்பட்டவேளைகளில் பல்கலை க்கழகங்கள் அதற்கு எதிரான சிந் தனையின் ஊற்றுமூலமாக இருந் தன.ஆனால் இப்போதோ நிலை மை மாறிவிட்டது.புத்திசீவிகளை பெருமளவில் உருவாக்கும் பல்கலை க்கழகங்களே இவர்களின் ஆதிக்க த்துள் வந்திருப்பது ஆபத்தே என்று தோன்றியது.

இது தொடர்பான எமது உரை யாடல் பயனுள்ளதென்று நினைக்கி றேன்.இதைப் பற்றி அடுத்த தூண் டிலில் கவனிப்போம்.

அட்டைப்படம்:

ஜீவன்

## தமிழகமெங்கும் ரிலீஸாகிவிட்டது

## "ஜெயலலிதா மகாத்மியம்"

(பக்திப் பாசிசப்படம்)




* கறுப்புப் பூனைகளின் அட்டகாசம் !

* திகைக்க வைக்கும் சட்டங்கள் !!!

* திடுக்கிட வைக்கும் இலங்கை அகதிகளுக்கெதிரான நடடிக்கைகள்!!!

* தலைவியை விழுந்து கும்பிடும் காட்சிகள் பிரம்மாண்டமான முறையில் படமாக்கப்பட்டுள்ளன.

டைரக்ஷன் & மூலக்கதை:
மத்திய அரசு
திரைக்கதை,நடிப்பு,ஒப்பனை:
ஜெயலலிதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஸ்பரிசம்.

மனிதனோடு மனிதன்
பழகி விட்டதனால்
அவன் மனதால்
ஸ்பரிசிக்கிறான்.

ஆண் மனிதன்
பெண் மனிதனோடு
தாய் மனிதன்
குழந்தை மனிதனோடு
என்று
இன்னனோரன்ன
ஸ்பரிசங்கள்.....

ஆம்!
காலத்தின் தாழ்ப்பாளிட்ட
கதவுக்குள்ளே
எத்தனை ஸ்பரிசங்கள்...

ஆமாம்!
ஸ்பரிசங்கள்
இன்று
விலங்கு உள்ளத்தோடும்
இணைந்துவிட்டன.
அது ஆச்சரியமல்ல....!

ஸ்பரிச
வேதனைகள்
உயிருள்ள நரம்புகளைக் கடந்து
உயிரற்ற சடப்பொருட்களுள்ளும்
புகுந்து
கத்தியோடு
மனிதக் கழுத்து!
தீச் சுவாலையோடு
முழு மனிதன்!!
துப்பாக்கியோடு
மனித இதயம்!!!
என்றெல்லாம்
ஸ்பரிசம் விரிந்து விட்டது.

ஆமாம் ஸ்பரிசத்தின்
வளர்ச்சி கூட
மனிதனிடம் இல்லையே?
என்ன செய்ய??

www.tamilarangam.net

காலத்தின்
வளர்ச்சி அது!
கண்ணை
மூடி விடாதே...
சடப்பொருளின்
ஸ்பரிசம்
உன் முகத்தில் கூட
பாயலாம்.
திறந்திரு மனிதனே!
என்று மட்டுந்தான்
என்னால்
சொல்லலாம்.

**

இளைய அப்துல்லாஹ் (இலங்கை)

---




ரஷியாவுக்கு மட்டுமல்ல,மூன்றாம் உலக நாடுகளுக்கும் "பணக்கார நாடுகள்" இப்படித்தான் கடன் "உதவி" வழங்கிக் கொண்டிருக்கின்றன !



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு தேசிய இனம் அழிக்கப்படுகிறது

இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகளை வெளிக்கொணருமுக மாக 03.08.1991 அன்று "தூண்டில் தகவல் நிகழ்" என்ற நிகழ்ச்சி பிலபீல்ட்டில் ஒழுங்கு செய்யப்பட் டது.இதையொட்டி இத் தகவல் நிகழை ஒழுங்கு செய்த குழுவிடம் இருந்த நிதியை இந் நிகழ்ச்சிக் காகப் பயன்படுத்துவது சம்பந்த மாக கூட்டம் ஒன்று கூடப்பட்டது.

அக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிலபீல்ட் புலிப் பொறுப்பாளர், 'தூண்டில்' தகவல் நிகழ் என்று ஏன் போடுவான்?இதே மாதிரி யான நிகழ்ச்சி 09.07.91இல் நடந் ததுதானே?தூண்டிலை இந் நிகழ்ச் சியில் விற்பார்களா? என்ற கேள் விகளை எழுப்பினார்.

இதற்கு,தூண்டில் தான் இத் தகவல் நிகழைச் செய்கிறார்களெ ன்றும்,முதல் நடந்த நிகழ்ச்சி மொழிபெயர்ப்பின்றி நடைபெற்ற தோடு (இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழ் நண்பர் ஒருவர் 5 நிமிடம் இடைவேளை என்று அறி வித்தது மட்டுமே தனக்கு விளங்கி யதாகக் கூறியதையும், இன்னொரு வர் இடைவேளை முடிந்துவிட்டது என்று அறிவித்ததை நிகழ்ச்சி முடிந்துவிட்டதாக எண்ணி வீடு திரும்ப முயற்சித்ததையும் காணக் கூடியதாயிருந்தது!) முதல் நடந்த தும்,தூண்டிலின் தகவல் நிகழும் வித்தியாசமானவை எனவும்,தூண் டிலை விற்பதும்,விற்காததும் நிக ழ்ச்சி வழங்குபவர்களால் முடிவு செய்யப்படவேண்டியது என்றும், அதை நாம் தடைசெய்ய முடியாது எனவும்,இலங்கை பற்றிய விவர ணப்படங்கள் மட்டுமன்றி அகதிக ளின் நிலை பற்றிய சட்டத்தரணியு டனான கலந்துரையாடலையும் முக் கியத்துவப்படுத்தியே இத் தகவல் நிகழ் ஒழுங்கு செய்யப்பட்டதென் றும் அப் புலிப் பொறுப்பாளருக்குக் கூறப்பட்டது.

தொடர்ந்து கதைக்க முடியா மல் ஆத்திரத்தை வரவழைத்துக் கொண்ட புலிப் பொறுப்பாளர் தான் கதிரையை (திருந்த) எடுத்து சுவருடன் அடி த்துவிட்டு வெளியேறினார்.சில நிமிடங்களுக்குப் பின் இரு கரங் களையும் கூப்பியவண்ணம் வந்து

www.tamilarangam.net

தன்னை மன்னித்துக்கொள்ளும்படி கேட்டார்.அதற்கு, நீங்கள் எங்களை மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை.இதுதான் உங்கள் பாணி எனப் பதிலளிக்கப்பட்டது.

ஒழுங்கு செய்யப்பட்டபடியே தூண்டில் தகவல் நிகழ் நடைபெற்றது.சுமார் 100 பேர் கலந்து கொண்டனர்.அரச பயங்கரவாதங்களுடன்,இயக்கங்களின் மக்கள் விரோத நடவடிக்கைகளும் படங்களுடன் விபரிக்கப்பட்டன.இதைத் தொடர்ந்து நடந்த சட்டத்தரணியுடனான கலந்துரையாடலில்,புதிய வெளிநாட்டவர் சட்டம் அகதிகளுக்கு எந்தவகையிலும் பாதுகாப்பற்றது என்பது விபரிககப்பட்டது.

முன்ஸ்ரர் நகரத்தில் நடைபெற்றதைப்போன்று இல்லாமல் பில பீல்ட் நிகழ்ச்சி 'நாகரிகமான' முறையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

- நக்கீரன்

---

## இங்கும் கை விளையாட்டு

ஊரிலிருந்து வரும் கடிதங்கள் மூலமே ஓரளவுக்கேனும் நாட்டு நிலைமைகளை அறிந்துகொள்ள முடிந்த எனக்கு படங்களுடன் செய்திகளைத் தரும் தகவல் நிகழ் ஒன்று எமது நகரத்திலேயே நடக்க இருப்பதாக அறிந்தபோது ஒரு எதிர்பார்ப்பே ஏற்பட்டிருந்தது . ஆனால் நோட்டீஸ் கிடைத்த ஒன்றிரண்டு நாட்களிலேயே இந்த நிகழ்ச்சி குழப்பப்படும் என்று எனது லாகரிலிருந்த புலி ஆதரவானர்கள் சொல்லிக்கொண்டார்கள். இதனால் தகவல் நிகழ் நடந்த தினம் இதற்குப் போய் ஏன் குழம்புவான் என்றெண்ணி வரவில்லை.ஏனைய வதிவிடங்களிலும் இப்படியான கதை பரவலாக அடிபட்டதாக பின்னர் அறிந்துகொண்டேன்.

தகவல் நிகழைப் பார்க்க வந்த சுமார் 150 பேரில் 60க்கு மேற்பட்டவர்கள் ஜேர்மென் மக்களாயிருந்தது இலங்கை பற்றி மறைக்கப்படும் பிரச்சினைகள்,மக்கள் படும் துன்பங்கள் பரவலாக்கப்படும் என்ற நம்பிக்கையைத் தந்தது.

நிகழ்ச்சி ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே அங்கு வந்திருந்த புலி உறுப்பினர்கள்,புலியின் நிதிப் பொறுப்பாளர்கள் அடிக்கடி குறுக்கீடு செய்து குழப்ப ஆரம்பித்து விட்டார்கள்.இவர்களில் பலர் வந்திருந்தாலும்,பிறீமன்,ஒஸ்னாபுறாக், முன்ஸ்ரர்,புன்ர நகரங்களின் புலிகளுடைய நிதிப் பொறுப்பானர்கள் உக்கிரமாக வாய் வீச்சாடினார்கள்.அவர்களின் நடவடிக்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களைப் பார்த்தபோது தகவல் நிகழைக் குழப்பி நடாத்தவிடாமல் செய்வதே அவர்களின் நோக்கம் என்பது தெளிவாகத் தெரிந்தது.

புலிகள் இயக்கம் புரட்சிகர இயக்கம்!என்று ஜேர்மன் மொழியில் எழுதப்பட்ட பிரசுரங்களை பிறிமன் நகரத்திலிருந்து வந்த புலி உறுப்பினர்கள் விநியோகித்தார்கள்.அத்துடன் புலிகள் இயக்கம் புரட்சிகர இயக்கமா?தலைமறைவு இயக்கமா?என்பதற்குப் பதில் சொல்லும்படி விவரணப்படம் காட்டிக்கொண்டிருந்தவரைப் புலி உறுப்பினர் ஒருவர் கேட்டார்."நீங்கள் புரட்சிகர இயக்கமா இல்லையா என்பதை தீர்மானிப்பது நீங்களோ இந்த டொச்காரரோ அல்ல,அதை மக்கள் தீர்மானிப்பார்கள் "என்று தூண்டில் ஆசிரியர் குழுவிலிருந்து வந்தவர் கூறினார்.

அகதிகளுக்குத் தான் கொண்டு சென்ற உணவுப் பொருட்களுக்கு புலிகள் பணமாக 15 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வரி வாங்கியதாகவும் கொண்டு சென்ற உதவிப் பொருட்களிலும் ஒரு பகுதியை வரியாக அவர்கள் எடுத்துகொண்டதாகவும் விவரணப்படம் காட்டியவர் கூறிய போது,"நாங்கள் வரி வாங்குவதில்லை" என்று ஒரு புலி உறுப்பினரும்,"நாங்கள் வரி வாங்குவது யாழ்ப்பாண அகதிகளைப் பராமரிக்க"என்று இன்னொரு புலி உறுப்பினரும் குறுக்கிட்டுக் கத்தினார்கள்.இவர்களுக்கே வரி வாங்குவது சரியா,பிழையா என்று சந்தேகம்!

முஸ்லீம் மக்கள் புலிகளால் கொலை செய்யப்பட்டும்,விரட்டப்பட்டும் விட்டபின் தமிழ்,முஸ்லீம் மக்களுக்கிடையேயான உறவு சீர்குலைந்திருப்பதுடன்,இரு இன மக்களும் பதட்டமான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருப்பதாக விபரணப்படம் காட்டிக்கொண்டிருந்தவர் கூறிக்கொண்டிருக்கும்போது "முஸ்லீம்களை நாங்கள் விரட்டியதற்கு காரணங்கள் இருக்கிறது.அவைகள் உங்களுக்கு விளங்காது"என்று ஒரு புலி உறுப்பினர் கூறினார்!!

இப்படியான கத்தல்கள்,குறுக்கீடுகளுடன் தகவல் நிகழ் நடாத்தி முடிக்கப்பட்டது.எனக்கருகிலிருந்த எங்கள் நகர சமூக உதவி அலுவலகத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் "புலிகள் இந்த நாட்டிலேயே இப்படி நடந்துகொள்கிறார்கள் என்றால் இலங்கையில் எப்படி மக்களை நடாத்துவார்கள் என்பதை இப்போது உணரக்கூடியதாக இருக்கிறது"என்று கூறினார்.

தங்களைப் பற்றிய 'இமேஜ்' உடைக்கப்பட்டு,தங்கள் சுயரூபம் வெளியே தெரியவருவதைப் பொறுக்க மாட்டாமலேயே புலி உறுப்பினர்கள் இப்படி அநாகரிகமாக நட

www.tamilarangam.net

ந்துகொள்கிறார்கள் என்பதை விள ங்கிக்கொள்ளக்கூடியதாயிருக்கிறது. இவர்கள் நடந்துகொண்ட விதத்தினால் புலி இயக்கம் எப்படிப்பட்டது என்பதை தகவல் நிகழ் பார்க்க வந்திருந்த தமிழர்கள் மட்டுமல்ல. ஜேர்மென் மக்களும் சேர்ந்தே அறிந்துகொண்டார்கள்.

- ம.ஜே.

---

முன்ஸ்ரர் நகரில் நடைபெற்ற மேற்படி எமது தகவல் நிகழில் கலந்துகொண்ட எமது குழுவில் ஒருவரான செல்வராஜாவுக்கு "சூட்டாசியன்பியூறொவுக்கு குத்து குடுத்துப்போட்டு தூண்டிலாடா அடிக்கிறீங்கள்","நீங்களும் நாட்டுக்குத் திரும்பி வருவியள்.அப்ப கவனிக்கிறம்"என்று கேவலமான வார்த்தைகளால் புலி உறுப்பினர்கள் ஏசினர்.தங்களால் மறைக்கப்படும் உண்மைகள் வெளிவருவதை ஜீரணிக்க முடியாமல் இவர்கள் கொள்ளும் ஆத்திரம் தொடர்ந்து இன்னும் பல தகவல் நிகழ்களை நடாத்த வேண்டிய தேவையை எமக்கு உணர்த்துகிறது.

முன்ஸ்ரர் நகரத்தில் உதவியதைப் போலவே ஏனைய பல நகரங்களில் தகவல் நிகழ் தொடர் நடாத்தப்பட்டபோது அந்த இடங்களைச் சேர்ந்த அகதி உதவி நிறுவனங்கள்,ஜேர்மன்,தமிழ் நண்பர்கள் ஆதரவு வழங்கியதுடன் தாங்களே முன்னின்றும் நடாத்தினர். எல்லோரும் தமது பொறுப்பையுணர்ந்து ஒன்றாக முன்னின்று உழைக்கும்போது எந்த ஜனனாயக மறுப்பு நடவடிக்கைகளும் தோற்றுப் போகும் என்ற நம்பிக்கை வருகிறது.

---

முல்லைகம் நகரத் தமிழர்களால் 17.07.91இல் பொன் நகரில் அகதிகளை நாடுகடத்தும் ஜேர்மன் அரசின் திட்டத்தை எதிர்த்து ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டு,கலம் 43இன் தலையங்களில் "தீர்வு"என்ற தலைப்பிலான பகுதியை பிரதிகள் செய்து பிரசுரங்களாக விநியோகித்தோம்.இப் பிரசுரத்தைப் புரிந்துகொண்ட ஊர்வலத்தில் கலந்துகொண்ட பலர் தாங்களாகவே முன்வந்து பிரசுரத்தை வாங்கி விநியோகித்தார்கள். இது போன்ற வெகுஜன நடவடிக்கைகளே பலமானதாகும்.இவற்றின் அவசியம் உணரப்பட்டு,சரியான நோக்கை நோக்கி இவ் வெகுஜன நடவடிக்கைகள் தொடரவேண்டும்.

- கடலோடிகள்

---

# இங்கே கன்னி கழிக்கப்படும்!

அனிச்சா (சமூம்)

காணி,நகை,வீட்டுடன்
கலியாணம் முடிந்தது.
அப்பாடா என்று
மூச்சு விடுவதற்குள்
முப்பது வயது முழுதாய் முடிந்து
முற்றியிருந்தான் மற்றவன்.

மிஞ்சி இனி ஏதுமில்லை.
கலட்டியில் இருந்த சிறு
காணியைத் தவிர.

ஊரில் மீசையுடன் எவருமில்லை.
அந்நிய நாட்டில் அகதிகளாய்
தாடியும்,மீசையுமாய்
தடியர்கள் உள்ளனராம்.
ஆம்பிளைதானாம் !
குமர்களை முற்றவிடாமல்
கன்னி கழிக்க
சீதனம் மட்டும்
சிறப்பாய் வேணுமாம்.

செருப்புகள் பல தேய
ஏழு படி ஏறி
பல இலட்சம் பெறுமதிக்கு
ஆம்பிளையாய் ஒருவனைக்
கண்டுபிடித்தனர்.

தாடி இருக்காம்.
மீசையும் இருக்காம்.
அந்நிய நாட்டில்
அனுமதியும் இருக்காம்.
இதற்கப்பால் என்ன?
ஒடு.
தாலி,நகை,கூறையுடன்
ஒடு.

**


தூண்டில்

ஓகஸ்ட் 1991

இலம் : 44

ஆசிரியர் குழு: கூடலோடிகள்



முகவரி: THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
Germany

தொலைபேசி: (0231) 136633
<புதன்கிழமைகளில்
14-20 மணிவரை>


\- - - - - - - - - - - - - - - - -

சந்தா

| | | |
|---|---|---|
| ஜேர்மனி | : 6 மாதங்கள் | = 20,- D.M |
| | 1 வருடம் | = 38,- D.M |
| ஐரோப்பா | : 6 மாதங்கள் | = 25,- D.M |
| | 1 வருடம் | = 48,- D.M |
| அமெரிக்கா, | | |
| ஆபிரிக்கா , | | |
| ஆசியா | : 1 வருடம் | = 65,- D.M |
| அவுஸ்ரேலியா: | 1 வருடம் | = 75,- D.M |

தபாற்கணக்கு இல: 308 074 68
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

\- - - - - - - - - - - - - - - - -

சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவி
யில் ஒன்றாக உங்கள் சந்தா
நிதியை அனுப்பிவைத்ததும் எம
க்கு கடிதம்,மூலம் அறிவியுங்கள்.

\- - - - - - - - - - - - - - - - -

உங்கள் கருத்துகள்,விமர்சனங்க
ளுடன் எங்களுடையதும்,உங்களு
டையதுமான முயற்சிகளைப் பய
னுள்ளதாக்குவோம்.

www.tamilarangam.net

# அறிவித்தல்

மற்றவர்களுடைய சுதந்திரத்தை அங்கீகரிப்பதில்தான் எங்களுடைய சுதந்திரத்திற்கு ஒரு அர்த்தப்பாடு இருக்க முடியும்.

வடக்கு.கிழக்கிற்கு வெளியேயுள்ள தமிழ் மக்களும்,புலம் பெயர்ந்தவர்களும் முஸ்லிம் மக்களின் உரிமைக்காகவும்,அவர்களுடைய பாரம்பரிய பிரதேசங்களில் அவர்களை வாழவைக்கவும் குரலெழுப்புவது மட்டு மன்றி தமிழ்த் தேசியவாதத்தில் நோய்க் கூறாகப் பரவிவரும் முஸ்லீம் எதிர்ப்பையும் ஆக்ரோஷமாக எதிர்க்க வேண்டும்.

இது ஒன்றுதான் தமிழ்மக்களை நீண்ட காலக் கண்ணோட்டத்தில் அனைத்து ஒரு சீர்குலைவுகளிலிருந்தும் விடுவிக்கும்.